வலு

ஜனவரி- மார்ச் 2019 | காலாண்டிதழ் | இதழ் - 21

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

ரூபா 100/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

04 சொர்ப்பன சுந்தரி நான்தானே...!
35 முற்றத்து மல்லிகை



ISSN 2513-2989

வெளியீடு :
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

DHL
WORLDWIDE EXPRESS
World Wide Express Courier Service
Foreign money Transfer
வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம்
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
WESTERN UNION
MONEY TRANSFER
பணப்பரிமாற்றம்
உலகின் எந்த நாட்டிலிருந்தும்
அனுப்பும் பணத்தினை
ஒருசில நிமிடங்களில் எம்மிடம்
பெற்றுக் கொள்ளலாம்
SriLankan
Airlines
❖ போட்டோ பிரதி
❖ ஆவணங்கள் மொழிபெயர்ப்பு
துரித கதியில் செய்து கொடுக்கப்படும்.
சங்கீதா
SANGEETHA AGENT ஏஜன்ட்
வெளிநாடுகளுக்கான
தபால்கள், பொதிகள் சேவைகளை
துரித கதியில் குறைந்த கட்டணத்தில்
அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.
யாழ். மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக
Office : TEL : 021 222 2525
Fax : 021 222 8546
No.412, Hospital Road, Jaffna.
இல.412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
E-mail: sangeethaagent@gmail.com

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

வலு

ஜனவரி– மார்ச் 2019 காலாண்டிதழ் இதழ் – 21

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

பிரதம ஆசிரியர்
திரு. க. தர்மசேகரம்

நிர்வாக ஆசிரியர்
திரு. நா. கீதா கிருஷ்ணன்,
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

ஆசிரியர் குழு
திரு. செ. சசிராஜ்,
திரு. ச.க. தேவதாசன்
திரு. செ. பிரிந்தாபரன்
செல்வி. சு. கானப்பிரியா

இதழ் குழு ஆலோசகர்
திரு. கணபதி சர்வானந்தா

வெளியீடு
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்
இல. 1166 / 15, அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 4224

பொருளடக்கம்

எண்ணக்கிண்ணம் – கவிதை - 02
காலமாற்றும் காயம் - 03
வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் - 04
ஏ.ஜே. ஞானேந்திரன்
வலைவெளி ஓட்டிசம் (Autism) - 07
பாலபாரதி
செய்திச் சாரம் - 09
தசரசம் - 10
முற்றத்து மல்லிகை - 33
வலுவிடம் கேளுங்கள் - 36
சிறுகதை 'மாற்றம்' - 37
வலுதரும் ஜோதிடம் - 40
மாற்றுத் திறனாளிகளை அரவணைப்போம் - 41
எழுதுங்கள் வெல்லுங்கள் - 44

எண்ணக்கிண்ணம்

ஊனம் என்பது குறையல்ல

ஊனம் என்பது குறையல்ல
மனித வாழ்வில் யாரும் நிறைவல்ல
குறை யாவும் தினம் பலர் சொல்ல- எழுந்து
நிறையாவோம் வானம் தனை வெல்ல

காதுகளில் தினமும் கறை கேட்க
மூடர்கள் இல்லை நாம் அதை ஏற்க
ஒருநாள் உலகம் எமைப்பார்க்க- பாடம்
சொல்வோம் இணைந்து இனம் கற்க

கண்கள் இருந்தும் நீ குருடன்- உழைக்க
கைகள் இருந்தும் நீ திருடன்
வளம் இருந்தும் பிழைக்காத மூடனே
வலம் இழந்த எமைப்பார்த்து நகைப்பதேன்?

முடமென்று உன்விரல்கள் எமைக்காட்டும்- ஆனால்
மூவிரல்கள் முடமென்று உனைச்சுட்டும்
விதண்டாத வாக்குவாதம் இருக்கட்டும்
பாகுபாட்டு பக்கவாதம் இருக்கட்டும்- உலகில்

நான்காண்டு தோறும் எம்மவர் பதக்கம்
ஒலிம்பிக்கில் இடுகிறது கர்ஜனை முழக்கம்
வலிமிக்க சாதனைகள் வந்ததன் விளக்கம்
எதிர்கால சந்ததிக்கு சரித்திரங்கள் விளக்கும்.

பகீரதன் ஜெறோன்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.

காலமாற்றும் காயம்

மனித குலம் மாற்றமடைதல் என்கின்ற இயற்கை நிலை சூத்திரத்திற்குள் வாழ்ந்து கொண்டிருக்கிறது. சமூக ,அரசியல், பொருளாதார மாற்றங்கள் சாதகமான சூழமைவுகளை ஏற்படுத்துகின்ற அளவிற்கு எதிர் நிலை யான விளைவுகளையும் தந்த வண்ணமாகவே உள் ளன. எதிர் நிலையான விளைவுகளுக்கு முகங் கொடுத் தல் என்பது மனித குலத்திற்கு சவால் நிறைந்ததாகவே இருந்து வருகின்றது. வலுவிழந்தவர்களும் இதற்கு விதிவிலக்கானவர்களல்லர்.

இயற்கை,விபத்து,யுத்தம் போன்ற அனர்த்தங்க ளால் அங்க இழப்பிற்கு உள்ளானவர்கள் தமது இழப்பு குறித்து மனக்கவலையுறுதலால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை அதுமட்டுமன்றி தங்கி வாழும் நடத்தையினை கைக்கொள்வதாலும் பயனேதும் ஏற்படப் போவதில்லை.

தமது அங்க இழப்பின் விளைவைப் புரிந்து கொண்டு சவால்களை எதிர் கொள்ளத்தக்க மனப்பாங் கையும் துணை நடத்தைகளையும் விருத்தி செய்து கொள்வதனூடாகவே உலகத்தோடு பொருந்தி வாழும் சூழல் வலுவிழந்தவர்களுக்கு வாய்க்கப்பெறும். குறித்த இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு சமூக மாந்தர்கள் அனைவரும் வலுவிழந்தவர்கள்மட்டில் கருமமாற்ற முடியும்.

காலம் காயங்களை ஆற்றவல்ல அருமருந்து என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்வது நன்மை தரும்.

திரு. க. தர்மசேகரம்
பிரதம ஆசிரியர்

வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

● ஏ.ஜே. ஞானேந்திரன்

சொப்பன சுந்தரி நான்தானே....!

இசைக்கு ஏது மொழி? இசைக்கு மயங்காதோர் இவ்வுலகில் யார்தான் உளரோ? தமது காந்தக் குரலால் இன்று கோடிக்கணக்கானவர்களை கவர்ந்திழுக்கும் பாடகர்கள் நம்மிடையே ஏராளமாக இருக்கிறார்கள். ஜிக்கி, சுசீலா, சித்திரா,ஜானகி என்ற அற்புத பாடகிகளை நமக்கு தமிழ்ச் சினிமாதான் தந்திருக்கின்றது. சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், யேசுதாஸ், பாலசுப்ரமணியன் என்று ஆண் பாடகர்களையும் இதே சினிமாதான் நமக்கு அறிமுகம் செய்திருக்கின்றது. இங்கேதான் வருகிறார் வைக்கம் விஜயலட்சுமி! வலுவற்றோர் என்ற பட்டியலில் நான் இருந்தாலும், "வலுவான என் குரல், என்னை உலகுக்கு அடையாளப்படுத்தியுள்ளது", என்று பெருமையோடு சொல்லுமளவிற்கு, இந்தக் கேரளப் பாடகி தன் இனிமையான குரலால் பாடி, தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்திருக்கிறார். இவர்கதை திரைப்படமாகப் போகின்றது. இது பார்க்கும் வலுவற்ற இவரை உலகத்தின் கண்களில் நிமிர்ந்து பார்க்க வைத்திருக்கின்றது. ஒன்றைப் பறித்து இன்னொன்றை அருளும் இறைவனின் திருவிளையாடல் இதுதான் போலும்.

வைக்கம் விஜயலட்சுமி (பிறப்பு: 7 அக்டோபர் 1981) காயத்ரிவீணை எனும் அரியதோர் இசைக்கருவி இசைப்பதில் தேர்ந்தவரும் திரைப்படப் பின்னணிப் பாடகியும் ஆவார். "செல்லுலாய்டு" என்னும் மலையாளத் திரைப்படத்தின் மூலமாக இவர் திரைத்துறையில் அறிமுகமானார்.

1981 ஆம் ஆண்டில் விஜயதசமி நாளன்று முரளீதரன், விமலா தம்பதியினருக்கு ஒரே மகளாய்ப் பிறந்தவர் விஜயலட்சுமி. இவர் பிறந்த இரண்டொரு நாட்களுக்குப் பிறகு இவரது பெற்றோருக்குத் தங்கள் மகள் பார்வைக் குறைபாடு பெற்றிருப்பது தெரிய வந்தது. பின்னர் இவர்களது குடும்பம் சென்னைக்கு இடம் பெயர்ந்தது. மிகச்சிறு வயதிலேயே ஒலிநாடாக்களில் வரும் பாடல்களை அப்படியே இராகம், தாளம் பிறழாமல் பாடும் விஜயலட்சுமியின் திறனைக் கண்ட அவர் தந்தை, ஜேசுதாஸ், மகாராஜபுரம் சந்தானம் ஆகியோரின் செவ்வியல் ஒலிநாடாக்களைக் கேட்கும்படி செய்தார்.

சிறுவயதில் கிடைத்த ஒரு வீணையில் பாட்டு வாசிக்க ஆரம்பித்தார் விஜயலட்சுமி. பின்னர் இவரது தந்தை ஒற்றைக் கம்பி வீணை ஒன்றை இவருக்கு அமைத்தளித்தார். இதன் காரணமாக இவருக்கு "ஒற்றைக்கம்பி வீணை காயத்ரி" என்ற பெயர் கிட்டியது. குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களே இந்த வீணைக்கு காயத்ரிவீணை என்னும் பெயரை அளித்தவர்.

"காற்றே காற்றே..." என்ற பாடல் தான் இவரைத் தமிழ் சினிமாவுக்கு முதன்முதலில் அறிமுகமாக்கி இருக்கின்றது. இந்தத் திரைப்படத்தின் பெயர் "ஜே.சி.டானியல்". இதையடுத்து "வீர சிவாஜி" படத்தில் "சொப்பன சுந்தரி நான் தானே" என்ற பாடல் இவர் இனிய குரலை தமிழ் ரசிகர்களிடையே பிரபல்யப் படுத்தியது. "புதிய உலகை புதிய உலகை" என்ற அடுத்த பாடலை, "என்னமோ ஏதோ" என்ற திரைப்படத்திற்காக இவர் பாடியபோது தமிழ் சினிமா உலகம் தன் புதியதொரு கண்டுபிடிப்பால் ஆர்ப்பரித்தது. வித்தியாசமான குரலால் பாடி விருந்து படைக்கும் அக்களிப்பில் ஏற்பட்ட ஆர்ப்பரிப்பு அது. சிவகார்த்திகேயன் தயா

ரித்துள்ள "கனா" படத்தில் "வாயாடி பெத்த புள்ள" பாடலை இணைந்து பாடியிருக்கிறார் விஜயலட்சுமி . சிவகார்த்திகேயனின் மகளுடன் சேர்ந்தே இந்தப் பாடலை இவர் பாடியிருந்தார். இந்தப் பாடல் இப்பொழுது பிரபல்யமாக இருப்பது இவரைப் பெரு மகிழ்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றது. இந்த வெற்றியின் எதிரொலியாக தனக்கு பல பாடல்களைப் பாட வாய்ப்புத் தேடி வருவதாக இவர் பெருமையோடு குறிப்பிடுகிறார். கேரளாவில் இருந்து கொண்டு, ஸ்கைப் மூலம் இவர் ஸ்ரூடியோவில் பாடிக் கொடுத்ததை , பின்பு "வாயாடி பெத்த புள்ள" என்ற பாடலுடன் இணைத்திருக்கிறார்கள். இந்தப் பாடலை நடிகர் சிவகார்த்திகேயனின் மகள் ஆராதனா பாடப்போவது தனக்கு அப்பொழுது தெரிந்திருக்கவில்லை என்று மனம் விட்டுக் கூறுகிறார் இவர்.

கடந்த வருடம் இவருக்கு திருமணம் நடந்தது, இவர் வாழ்வின் இன்னொரு மைல்கல். அனூப் என்ற மிமிக்ரி கலைஞருக்கும் இவருக்கும் சென்ற வருடம் செப்டெம்பர் 18 அன்று குடும்பத்தார் மற்றும் பிரபலங்கள் கலந்து கொள்ள, திருமணம் இவரது ஊர்க் கோவிலில் இடம் பெற்றிருந்தது.

சமீபத்தில் விகடன் இவரைப் பேட்டி கண்டபோது, இதுவரை நிறைவேறாத அவரது நீண்ட ஆசை பற்றிக் கேட்டிருந்தது. கண்பார்வை இல்லாத குறையைக் குறிப்பிட்டு, தனக்கு கண்பார்வை கிடைத்து, தன் ஆசைப் பெற்றோரை நேரில் பார்த்து ரசித்து ஆசைதீர ஆரத் தழுவிக் கொஞ்ச வேண்டும் என்பதே தனது நீண்ட காலக் கனவு என்று குரல் தழுதழுக்க தனது ஆற்றாமையை வெளிப்படுத்தி இருந்தார். இப்பொழுது பணவசதி இருப்பதால் அமெரிக்கா பயணமாகி, மருத்துவ ஆலோசனை பெற இவரால் முடிந்துள்ளது. கண் மற்றும் மூளை நம்புகளுக்கிடையிலான சிக்கல் தான் குறைபாட்டுக்கு காரணம் என்பதை மருத்துவர்கள் கண்டறிந் திருக்கிறார்கள். இரண்டு வருட காலம் காத்திருக்கும்படி கேட்டிருக்கிறார்கள். நம்பிக்கையோடு காத்திருக்கிறார்.

திரைஉலக இசை ஜாம்பவான்களான ஏ.ஆர்.ரஹ்மான், இளையராஜா ஆகியோரின் இசையில் பாடவேண்டும் என்பதும் எனது இன்னொரு கனா என்பதை விகடன் பேட்டியில் இவர் வெளிப்படுத்தி இருக்கிறார். கடந்த 10வருடங்களில் 400க்கு மேற்பட்ட மேடைகளில் இவர் கச்சேரி அரங்கேறி இருக்கின்றது. சென்னை மாநகரின் அனைத்து முக்கிய சபாக்களிலும் இவர் பாடியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தடைகள் இருப்பதும் ஒரு சுகம் தான் போலும். தடை தாண்டிப் பாய வேண்டும் என்று மனதுள் எழும் உற்சாகந்தான், ஒருவரை முழுப் பலத்தையும் பிரயோகித்து இயங்க வைக்கின்றது போலும்.

(வலு 20 இதழ் தொடர்ச்சி...)

சென்சரி பிரச்சினைகள்

(Sensory Problems)

பாகம்-04



ஓட்டிசம்

பாலபாரதி

சென்சரி பிரச்சனைகள் உடையவர்களுக்கு உதவச் சில வழிமுறைகள்:

இந்த வழிமுறைகள் எல்லாமே எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்து வன அல்ல. ஓட்டிச வல்லுனர்கள் (Therapist) மற்றும் பெற்றோர் கலந்து பேசி குழந்தையின் தேவைக்கேற்ப கீழே தரப்பட்டுள்ள விடயங்களையும் அவர்க ளின் அறிவுறுத்தல்களுடனான செயல்க ளையும் பின்பற்றி முயற்சிக்கலாம்.

பார்வை தொடர்பான சென்சரி உடையோருக்கு:

1. ஃபுளோரசண்ட் விளக்குகளை தவிர்த்தல்.
2. குளிர் கண்ணாடி அணியப் பழக்கு தல்.
3. திரைச்சீலைகளை பயன்படுத்திகுழந் தைகளுக்கு கண்ணை உறுத்தாத அளவுக்கு ஒளியைக் குறைத்தல்.

ஒலி தொடர்பான சென்சரி சிக்கல்களுக்கு:

1. கதவு மற்றும் ஜன்னல்களை அடைத்து வெளிச் சத்தம் வீட்டின் உள்ளே வராது தடுத்தல்
2. சத்தம் அதிகமான இடங்களுக்குப் போவதற்கு முன்னரே குழந்தையை மனதளவில் அதற்கு தயார் செய்தல்
3. காதுகளில் ஒலிவாங்கி(ear plug) பொருத்திக் கொண்டு இசை கேட்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்.

தொடுகை உணர்வு தொடர்பான சிக்கல்களுக்கு

1. அதிக எடை கொண்ட போர்வைக ளையோ நித்திரைப் பைகளையோ உபயோகிக்கலாம்.
2. குழந்தையைத் தொடுவதற்கு முன் அதற்கு அதை முன்கூட்டியே சொல் லுங்கள். எப்போதுமே முன் புறத்தி லிருந்து மட்டும் குழந்தையை அணு குங்கள். -இவையெல்லாம் நம் தொடுகைக்கு குழந்தை தன்னை தயார் செய்து கொள்ள வாய்ப்புக் கொடுக்கவே.
3. அணைத்தல் என்பது குழந்தைக்கு வலி ஏற்படுத்தும் என்பதை உண ர்ந்து அதை தவிர்க்கவும்.
4. வெவ்வேறு வகையான கட்டமைப்பு (texture) உடைய பொருட்களை மெல்ல மெல்ல பழக்குதல்.

❖ சிலருக்கு கொழகொழ (உ+ம்: அல்வா, மைதா மாவு உருண்டை, சகதி, களிமண்) என்ற பொருட்கள் பிடிக்காமல் இருக்கலாம்.

❖ வேறு சிலருக்கு மென்மையான (உ+ம்: பஞ்சு, பூத்துண்டு, வெல்வெட் துணி) போன்றவை, பிடிக்காமல் இருக்கலாம்.

❖ வேறு சிலருக்கு சொரசொரப்பானவையும் (உ+ம்: சாக்பீஸ் சிமெந்துத் தளம், கருங்கல் தளம்) போன்றவை பிடிக்காமல் இருக்கும்.

5. தானே பல் துலக்கவும், தலை வாரவும் கற்று கொடுத்துவிட்டால் தங்கள் விருப்பம் போல அவர்களே அவற்றையெல்லாம் செய்து கொள்வார்கள். நம் தொடுகையை தாங்க வேண்டியிருக்காது.

வாசனை தொடர்பான உணர்வு பிரச்சனைகளுக்கு:

1. முடிந்தவரை வாசனை இல்லாத டிட்டெர்ஜெண்ட், ஷாம்பூ போன்றவற்றை பயன்படுத்துங்கள்.
2. அவர்களுக்கு பிடிக்காத வாசனையை போக்க வேறு ஏதேனும் நறுமணத்தை பரப்பலாம்
உ+ம்: சாம்பிராணி, அஷ்டகந்தம்) போன்றவை

சமநிலை உணர்வை சரி செய்ய:

1. ஊஞ்சல், சீசாப் பலகை, வளைவான அடிப்பாகமுள்ள குதிரை பொம்மை போன்றவற்றில் விளையாட ஊக்குவிக்கலாம். இவை எல்லாமே குழந்தைகளின் சமநிலை தொடர்பான உணர்ச்சிகளை சமன் செய்யக் கூடியவை.



2. வேலைகளை துண்டு துண்டாக பிரித்து, ஒவ்வொன்றாக செய்ய ஊக்குவிக்கலாம்.

உடல் பற்றிய தன்னுணர்வு சிக்கல்களுக்கு:

1. அவர்களை நடமாட வசதியான இடத்தில் அமருமாறு பார்த்துக் கொள்வது ஏதேனும் ஒரு மூலையில் உட்காருவதற்கு பதில் அறையின் மையத்தில் உள்ள நாற்காலியில் உட்காரச் செய்யலாம்.
2. தரையில் வண்ண நாடாக்களை ஒட்டி வைத்து நடமாடுவதற்கான பாதையை உணர்த்தலாம்.
3. எப்போதும் ஒருவரிடமிருந்து ஒரு கை அளவு தூரத்தில் நின்றே பேச வேண்டுமென்று பழக்கலாம். எனவே கையை நீட்டி, அது இடிக்காத தூரத்தில் நின்று உரையாட பழகுவர்.
4. சமநிலைப் பலகை (balance board) போன்ற சிறு கருவிகளை வீட்டிலேயே தயாரித்து உபயோகிக்கலாம்.

(தொடரும்...)



செய்திச் சாரல்

கருவியின்

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வினை கடந்த 2.12.2018 அன்று பருத்தித்துறை.கல்லூரி வீதியில் அமைந்துள்ள ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் அனுட்டித்திருந்தது.

கருவியின் தலைவர் திரு.க.தர்மசேகரம் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரசபை தவிசாளர் திரு.J.இருதயராஜ் அவர்களும் சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி அதிபர் செல்வி கிறேஸ் தேவதாயளினி தேவராஜா அவர்களும், கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி சிவன் அறக்கட்டளை நிலைய ஸ்தாபகர் திரு கணேஸ்வரன் வேலாயுதம் அவர்களும், யாழ் இன்பத்தேன் மென்பான நிலைய உரிமையாளர் திரு.முருகன்றஞ்சன் முத்துக்குமார் அவர்களும், கருவியின் வளவாளர் திரு சுப்பையா கணேஸ் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்விக்கான ஆசியுரையினை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜா குருக்கள் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் கருவி நிறுவனம் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் இடையே வலுவிழந்தவர்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் நடத்திய கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் இந்நிகழ்வில் கருவி அங்கத்தவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வாழ்வாதார உதவிகள், மாணவர்களுக்கான கல்வி உதவிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்விற்கு கருவி அங்கத்தவர்கள் நலன்விரும்பிகள் என 300 பேர் வரை கலந்து கொண்டனர். இவர்களுக்கு தேநீர், சிற்றுண்டி, மதிய போசனம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.



தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்

தசரசம்

இலக்கியம் | இலங்கை | உலகம் | விண்வெளி | விளையாட்டு

மருத்துவம் | தாவரம் | விலங்கு | பிரபலம் | அதிசயம்

01. இலக்கியம்

இராமர் கதை

இமயமலையில் உற்பத்தியாகி ஓடிவருகின்ற சரயு நதி. அனைத்து உயிரினங்களையும் தாயாக அரவணைக்கின்றது. இந் நதிக்கரையில் கோசல நாடு அமைந்துள்ளது. நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய செல்வச் செழிப்பான இந்நாட்டின் தலைநகரம் அயோத்தி. இங்கு வாழும் மக்கள் நல்லொழுக்கமும் நற்பண்பாடும் மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள். அமைதியின் இருப்பிடமாய் அமைந்த அயோத்தியில் மங்கள ஒலியே எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும். இத்தகைய பெருமைவாய்ந்த அயோத்தியை சூரியகுலத்தில் உதித்த தசரத மன்னன் ஆட்சி புரிந்து வருகின்றான். ஏழு உலகங்களிலும் அவனது செங்கோல் சிறப்புற்று விளங்கியது. அன்பும் பண்பும் நிறைந்த அவனது ஆட்சியில் நன்மைகள் விளைந்திருந்தது. கல்வியறிவு மற்றும் கேள்வியறிவு என்பவற்றில் இவன் சிறந்தவன்.

இம்மன்னனுக்கு கோசலை, கைகேயி, சுமித்திரை என மூன்று மனைவியர். திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் இவர்களுக்கு குழந்தைப்பாக்கியம் கிடைக்கவில்லை. இக்குறையினை மன்னன் தனது குலக்குருவாகிய வசிட்ட முனிவரிடம் தெரிவிக்க அவர் புத்திரகாமிய யாகம் செய்தால் உன் மனக்குறை நீங்கும் என்றார். மன்னனும் அதன்படி யாகத்தைச் செய்ததன் பயனாக கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலக்குமணன் மற்றும் சத்துருக்கனும் பிறந்தனர். இதனால் மன்னனும் இராணியர்களும் அரசசபையினரும் அயோத்தி மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்தனர்.



சகலருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் குண முடைய இவ் இராசகுமாரர்கள் தமது குருவாகிய வசிட்டரிடம் கல்வியையும் வில்வித்தை யினையும் கற்றுத் தேர்ந்தனர். இவ் நால்வரும் மிகுந்த ஒற்றுமை உடையவர்களாய் சகோதரப் பாசத்திற்கு இலக் கணமாய் திகழ்ந்தனர். இதில் இராமன் இலக்குமணன் மற்றும் பரதன் சத்துருக்கன் ஆகியோர் இணை பிரியாது இருந்தனர். இவர்களது செயல்கள் தந்தை யின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

ஒருநாள் தசரத சக்கரவர்த்தி அரண்மனையில் கொலு மண்டபத்தில் அமைச்சர் பரிவாரங்கள் புடைசூழ அமர்ந்திருந்தான். அப்போது விஸ்வாமித்திர மகரிஷி அந்த அரசவைக்கு வந்தார். அவரைக் கண்ட தசரத சக்கரவர்த்தி, எழுந்துவந்து, தன்னை நாடி வந்திருக்கும் முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்கி வரவேற்று வந்த காரணத்தை வினாவ அதற்கு அவர் "தசரதா! கேள். என்னைப் போன்ற முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் ஏதாவது இடையூறு வந்ததென்றால் அதை நீக்கிக் கொள்ள கைலாயத்திலிருக்கும் சிவபெருமானையும், திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள திருமாலையும், பத்மபீடத்து நன்னகர் எனும் தாமரை ஆசனமுடைய பிரம்ம லோகத்தையும், அதன் தலைநகரான அமராவதிப் பட்டணத்தையும், மணிமாடங்களைக் கொண்ட அயோத்தி எனும் பொன்னகரத்தையுமன்றி வேறு புகலிடம் எங்களுக்கு ஏது?" "தசரதா! நான் கைலாயத்துக்கோ அல்லது பாற்கடலுக்கோ, பிரம்ம லோகத்துக்கோ செல்வதைக் காட்டிலும் மிக எளிதாக உன்னை வந்தடைய முடியும் என்று கருதியே உன்னை நாடி வந்துள்ளேன்" என்றார். இதனைக் கேட்ட தசரதன் "முனிவர் பெருமானே! யான் அரசு எய்திய பயனை இன்றே அடைந்தேன். நான் தங்களுக்குச் செய்ய வேண்டியது என்ன என்பதைக் கூற வேண்டும்" என்றான். அதற்கு விஸ்வாமித்திர முனிவர் "தசரதா! நீ பெரிய காரியம் எதுவும் எனக்காகச் செய்ய வேண்டாம். அடர்ந்த வனத்துக்குள் நான் ஒரு தவ வேள்வியை நடத்துகிறேன். அதற்கு அரக்கர்கள் இடையூறு விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை தடுத்து நிறுத்த நின் மக்கள் நால்வரில் கரிய செம்மலாகிய ராமனை என்னோடு அனுப்பிவை" என்றார். முனிவருடைய இந்த வார்த்தைகள் மன்னனின் உயிரையே பறிப்பது போல இருந்தது. தசரத சக்கரவர்த்தி உடல் நடுங்க, குரல் தழுதழுக்க, கைகூப்பி முனிவரிடம் கூறுகிறான்: "முனிவர் பெருமானே! அரக்கர்களால் தங்கள் யாகம் தடையின்றி நடைபெற வேண்டும் அவ்வளவுதானே? என் மகன் ராமன் வயதில் இளையவன். போர் பயிற்சியும் இல்லாதவன். ஆகையால் அவன் வேண்டாம். உமது வேள்விக்கு இடையூறாக யார் வந்தாலும், நான் வந்து அவர்களை முறியடித்து உங்கள் யாகத்தை பாதுகாப்பேன் என்றான்.

இப்படி தசரத மன்னன் சொன்னதுதான் தாமதம், முனிவருக்கு பெரும் கோபம் வந்தது. சூழ்நிலையின் இறுக்கத்தைப் புரிந்துகொண்ட தசரத மன்னனின் குல குருவான வசிட்ட முனிவர் பேசலானார். அவர் தசரத மன்னனைப் பார்த்து "மன்னா! விசுவாமித்திர முனிவரது நோக்கத்தைப் புரிந்து கொள்!" என்று சொல்லிவிட்டு முனிவரிடம் "முனிவரே! நீர் சற்று பொறுத்துக் கொள்ளுங்கள். அமைதியடையுங்கள்" என்றார். பின்னர் மன்னனைப் பார்த்து "மன்னா! உன் மகனுக்கு அளவிலா நன்மைகள் வந்து சேர்வதை நீ விரும் பவில்லையா?" என்றார். "உன் மகன் ராமனுக்கு அளவற்ற அஸ்திர வித்தைகள் தெரிந்து கொள்ளும் நேரம் வந்திருக்கிறது. இதைப் புரிந்து கொண்டு நடந்து கொள்" என்றார். குருவின் வார்த்தைகளைக் கேட்ட தசரதன், உடனே இராமனை அழைத்து வரக் கட்டளையிட்டான். காவலர்கள் ராமனிடம் சென்று மன்னர் அழைப்பதாகக் கூற, அக்கணமே ராமன் தன் தம்பி இலக்குவனோடு அரசவை வந்து சேர்ந்தான். அவர்களை முனிவரிடம் காண்பித்து தசரதன் "ஐயனே! இந்தச் சிறுவர்க்கு இனி நல்ல தந்தையும் தாயும் நீயே! இவர்களை உம்மிடம் அடைக்கலமாக ஒப்புவித்தேன்" என்றான். இராம லக்ஷ்மணர்களைக் கண்டதும் விசுவாமித்திர முனிவரின் கோபம் தணிந்தது. மகிழ்ச்சியடைந்தார். இராம லக்ஷ்மணர் களை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டு, நாம் போய் வேள்வியை முடிப்போம் என்று கூறி தசரதனை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார்.

முனிவர் முன் செல்ல அவர் பின்னே அம்புராத் தோணியைத் தோளில் தாங்கியவாறு இராமனும் , இலக்குவனும் நகரின் எல்லையை அடைந்தனர். அங்கிருந்து மூவரும் நடந்து சென்று சரயு நதியை அடைகின்றனர். அப்போது இரவானதால் அப்பொழுதினை அங்குள்ள சோலையில் கழித்தனர். விடிந்ததும் ஒரு படகில் ஏறி, சரயு நதியைக் கடந்து அங்குள்ள சோலையில் இருந்த காமன் ஆச்சிரமத்தில் மறுநாள் பொழுதை கழித்தனர். பின்னர் அவர்கள் பாலைவனப் பிரதேசத்தை கடக்க நேர்ந்தது. அச்சமயம் இராம இலக்ஷ்மணர்களை வெப்பம் தாக்காமல் இருக்க முனிவர் அவர்களுக்கு பலா, அதிபலா எனும் இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். அவ்விரு மந்திரங்களின் மகிமையால் அந்தப் பாலைவனத்தில் நடை வருத்தம் தெரியாமல் பயணித்தனர். அச்சமயம் இராமர் முனிவரை நோக்கி இப் பாலைவனம் இவ்வளவு கொடுமையாக மாற காரணம் என்ன என்று வினவ, அதற்கு அவர் "ராமா! இந்தக் காட்டில் பல உயிர்களைக் கொன்று, தின்று வாழ்பவளும், ஆயிரம் மத யானைகளின் பலத்தைக் கொண்டவளுமான ஒருத்தி இருக்கிறாள். அவள் கதையைச் சொல்கிறேன் கேள்!"

இராட்சத குலத்தில் வந்த சுகேது என்பவன் தனக்குப் பிள்ளையில்லாததால் மனம்வருந்தி, அக்குறை தீர பிரம்ம தேவனைக் குறித்து நெடுநாள் தவம் செய்து வந்தான். அவனது கடும் தவத்தை மெச்சி பிரம்ம தேவன் அவனிடம் என்ன வரம் வேண்டுமென்று கேட்க, அவன் தனக்கு ஒரு மகன் வேண்டும் என்றான். அதற்கு பிரம்மன் "உனக்கு இந்தப் பிறவியில் மகன் பிறக்கும் பாக்கியம் இல்லை, ஆனால் உனக்கு ஒரு மகள் பிறப்பாள்" என்று வரமருளினார். அந்தப் பெண் லக்ஷ்மி போன்ற அழகும், ஆயிரம் யானைகளின் பலமும் கொண்ட ஒரு பெண்ணாக இருப்பாள் என்றும் பிரம்மன் கூறியருளினார். அதன்படி சுகேதுவுக்கு தாடகை என்ற பெண் பிறந்து, வளர்ந்து மணப் பருவம் அடைந்தாள் அப்பொழுது அவளது அழகிற்கும், வலிமைக்கும் ஏற்ற கணவன் யார் என்று ஆராய்கையில், இயக்கர் தலைவனான சுந்தன் என்பவனே பொருத்தமுடையவனாக இருப்பதனை உணர்ந்த தந்தை

அவனுக்கு அவளை மணம் செய்து வைத்தார். இவர்களுக்கு மாரீசன், சுபாஹு என்று இரண்டு மகன்கள் பிறந்தனர். இவ்விருவரும் உடல் வலிமையும் வஞ்சனைக் குணமும் மாயைவித்தையும் கொண்டவர்களாய் விளங்கினர்.

இவர்களின் தந்தையான சுந்தன் ஒரு முறை அகத்திய முனிவரின் ஆசிரமம் சென்று அங்குள்ள மரங்களை வேருடன் பிடுங்கி எறிந்து அட்டகாசம் செய்தான். இதனைக் கண்ட முனிவர் வெகுண்டார். அவர் பார்த்த கோபப் பார்வையில் அந்த அசுரன் எரிந்து சாம்பலாகிப் போனான். இந்த செய்தி கேட்ட தாடகை தன் கணவனைக் கொன்ற முனிவரைக் கொல்ல தன் புதல்வர்களுடன் முனிவரின் ஆச்சிரமத்திற்கு வந்தாள். அவர்கள் மூவரும் அங்கு சென்று செய்த அடாவடித்தனங்களைக் கண்டு சினந்த முனிவர், நீங்கள் மூவரும் அடாது செய்ததால், அரக்கர்களாகி சாவடைவீர்கள் என்று சாபமிட்டார். இதனால் மூவரும் அரக்கர்களாயினர். மாரீசனும், சுபாகுவும் பாதாளத்தில் இருந்த சுமாலி என்பவனிடம் போய் தங்களை அவனது அபிமான புத்திரர்களாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்ட, அவனும் அவ்வாறே இவர்களை ஏற்றுக் கொண்டான். இந்த சுமாலி என்பவன் இராவணனுடைய தாயாகிய கேகசிக்குத் தந்தையாவான் . இவன் தன் சகோதரர்களான மாலி, மாலியவான் ஆகியோருடன் இலங்கை யில் குடிபுகுந்து தேவர்களுக்குப் பல இன்னல்கள் புரிந்து வந்தான். இவர்களில் திருமாலுடன் போரிட்டு மாலி மாய்ந்தான், மற்றவர்கள் பாதாளத்தில் பதுங்கிக் கொண்டனர். பிறகு, குபேரன் இலங்கையை கைப்பற்றி ஆட்சி புரியும் காலத்தில் இராவணன் பிறந்து, வளர்ந்து பற்பல வரங்களைப் பெற்று, குபேரனை விரட்டிவிட்டு இலங்கையைத் தனதாக்கினான்.

அதனால் சுமாலி முதலியோர் மீண்டும் இலங்கையில் குடிபுகுந்தனர். சுமாலியோடு சேர்ந்த மாரீசனும் சுபாகுவும் இலங்கையில் குடியேறி அங்கு இராவணனின் மாமன்கள் என்ற முறையில், பற்பல கொடுஞ் செயல்களைச் செய்து வந்தனர். தன் மக்கள் தன்னை விட்டுப் பிரிந்தமையால் தாடகை இந்த வனத்திற்கு வந்தாள். மிகுந்த வல்லமை படைத்த இவளது நஞ்சு உமிழும் கண்களும், இடிபோன்று ஆரவாரிக்கும் குரலும், ஊழித்தீ போன்ற செம்பட்டை மயிரும், இருபிறை போன்ற கோரைப் பற்களும், கடல் எழுந்து நடப்பது போன்ற உருவமும் கொண்டவள் தான் இந்த தாடகை என இவளின் வரலாற்றினை விஸ்வாமித்திர முனிவர் இராமனிடம் கூறினார். இவள் தான் வளமிக்க இந்த பூமியை இப்படி பாலை வனமாக ஆக்கி விட்டாள். இவள்தான் இங்குள்ள உயிர்களை அழித்ததோடு நின்று விடாது இராவணன் ஏவலால் எனது வேள்விகளையும் கெடுத்துக் கொண்டிருக்கிறாள் என்று முனிவர் கூறுகிறார்.இதைக் கேட்ட இராமன் வியப்பும், அந்த அரக்கியைப் பார்க்க வேண்டுமென்ற அவாவும் கொண்டான்.

அப்போது முனிவர் எதிரேயிருந்த மலையைக் காட்டி "இதோ இந்த மலைதான் அவள் வசிப்பிடம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு மலை பற்றி எரிவதைப் போல அந்த அரக்கி கையில் சூலத்தோடு வந்தாள். "இந்தக் காட்டுப் பகுதியில் இருந்த அனைத்து உயிர்களையும் நான் தின்று தீர்த்த பிறகு, எனக்கு உணவாகும்படி நீங்களாகவே வந்திருக் கிறீர்களா? உங்கள் தீவினை உங்களை இங்கே கொண்டு வந்து சேர்த்திருக்கிறதா? சொல்லுங்கள்" என்றாள். "உங்களைக் கொல்லுகிறேன் பார்!" என்று தனது கையிலிருந்த சூலத் தைக் குறிபார்த்து எறியத் தயாரானாள். இராமன் தனது அம்பினை அவள் மீது செலுத்தத் தயங்கினான். இராமனுடைய கருத்தை உணர்ந்த முனிவர் சொன்னார்: "இராமா!

அவள் உருவத்தில்தான் பெண். ஆயினும் செயலால் ஆண்களையும் விஞ்சுபவள். அவளைக் கொல்லுதல் அறச் செயலேயன்றி குற்றம் அல்ல" என்றார். "இவள் எங்களைக் கொன்று தீர்க்காத குறைதான், அவ்வளவு தீமைகளைச் செய்து வருகிறாள். தவம் செய்து எலும்பும் தோலுமாக உள்ள எங்களை வெறும் சக்கை (கோது) என்று சாப் பிடாமல் விட்டு வைத்திருக் கிறாள்.

இவளைப் பெண் என்று கருதாதே. பற்பல உயிர் களையும் வாரி வாரித் தன் வாயில் இட்டுத் தின்கிறாளே. இதனினும் தீமை வேறு உளதோ? நான் தருமத்தைக் கூறினேனே தவிர இவளிடம் உள்ள கோபத்தால் இவளைக் கொல்லும்படி சொல்லவில்லை. இனியும் தாமதியாமல் உடனே இவளைக் கொல்வாயாக! தீயவரை அழித்து நல்லோரைக் காப்பது அரச தர்மம். உன் தர்மத்தைச் செய்!" என்றார் முனிவர். "குருவாகிய நீர் பணிப்பது எதுவாயினும், அதனை செய்து முடிப்பது என் கடமை" என்று இராமன் கூறிக்கொண்டிருக்கும் போதே தாடகை தன் கையிலிருந்த சூலத்தை இராமன் மீது வீசினாள். அந்த சூலம் தன்னை நெருங்கமுன்னர் வில்லை வளைத்து அம்பைச் செலுத்தி அந்த சூலத்தைப் பொடிபொடியாக்கினான் இராமன். உடனே சரமாரியாகக் கற்களை வீசி இராமனைத் தாக்கினாள் அரக்கி. அவ்வளவையும் தன் அம்பினால் தகர்த்து தூள் தூளாக்கினான் இராமன்.

இனியும் இவளை விட்டு வைக்கக் கூடாது என்று இராமன் ஓர் அம்பை எடுத்து, அந்தக் கருநிற அரக்கி மீது விட்டான். அந்த அம்பு கல் போன்ற அவளது நெஞ்சை பிளக்க கீழே விழுந்தாள். அவள் உயிர் நீங்கிய பிறகு அரக்க வடிவம் நீங்கி முந்தைய இயக்கி வடிவம் பெற்று, இராமனை வணங்கி அவன் அருளால் நல்லுலகம் அடைந்தாள். ஒரு போரில் மன்னனை வீழ்த்துவதற்கு முன்பு அவனது வெற்றிக் கொடியை வீழ்த்துவது போல இராவண சம்ஹாரத்துக்கு முன்னதாக அவனோடு தொடர்புடைய ஓர் அரக்கி வீழ்ந்தாள். இது அரக்கர்கள் உடனான இராமனின் முதற் போர்வெற்றியாகத் திகழ்ந்தது. தாடகைவதம் நடந்தது சூரியாஸ்தமன வேளையிலாகும். பின்னர் இராப் பொழுதை அங்கேயே கழித்தனர்

தொடரும்...



02. அக்குபஞ்சர் மருத்துவம்:-

அக்கஸ் (Acus) பஞ்சுரா (Punctura) என்ற லத்தீன் வார்த்தைகளிலிருந்து பிறந்ததுதான் அக்குபஞ்சர் (Acupuncture) என்ற சொல். அக்கஸ் என்றால் ஊசி, பஞ்சுரா என்றால் குத்துதல் என்பது பொருளாகும்.

தசைக்கோளங்களை இயக்கும் நரம்புகளின் ஆக்கப் பணியினை நன்கு அறிந்திருந்த நம் முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப்புள்ளிகள் இருக்கின்றன என்று கண்டுபிடித்திருந்தார்கள் இந்த மர்மப்புள்ளிகளை இந்திய நாட்டினர் வர்மப்புள்ளிகள் என்றும் சீன நாட்டினர் அக்குபஞ்சர் (Acupuncture Points) என்றும் பெயரிட்டு அழைத்தனர்.

மேற்படி அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தியோ (Acupressure) அல்லது ஊசியினால் குத்தியோ, திருகியோ, உடலில் உள்ள தசைகளையும், நரம்புகளையும் இயங்க வைக்கவும் இயங்கா நிலையில் வைக்கவும் செய்து செயல்திறனை ஊக்குவிக்க முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள்.

இந்த அதிசய கண்டுபிடிப்பே பின்னர் உடலில் உள்ள பாகங்களின் வியாதிகளைப் போக்க அடிகோலியது. இந்த மர்மப் புள்ளிகனினூடாக வியாதிகளைக் குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்று அழைக்கப்படுகிறது.

அக்குபஞ்சர் என்னும் அதிசய வைத்திய முறை 5000 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டது என்றாலும் அதனை நெறிப்படுத்தி ஒரு அரிய கலையாக உலகிற்குக்கு வழங்கியவர்களில் முக்கியமானவர். கி.மு.2697-க்கும் 2596-க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த சீன நாட்டு சக்கரவர்த்தி ஹுவாங் - டி என்பவர் ஆவார். இவரே அக்குபஞ்சரின் தந்தை என போற்றப்படுகிறார். இன்று இந்த சிகிச்சை முறை உலகம் முழுதும் பரவி உலக சுகாதார அமைப்பாலும் (WHO) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உலகம் நிலம், நீர், வளி, ஆகாயம், நெருப்பு எனும் பஞ்சபூதங்களால் ஆனது. எமது உடலும் இவற்றுடன் தொடர்புடையது எனவே உலகிலுள்ளது உடலிலுள்ளது. இதனால் தான் இப்பிரபஞ்சத்தை ஆங்கிலத்தில் மேக்ரோகாசம் என்றும் மனிதனை மைக்ரோகாசம் என்றும் கூறுகிறார்கள். எனவே இந்த மனித உடலுக்கு ஆதாரமாக உள்ள பஞ்சபூத சக்தியின் அளவுகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவே நோய் ஆகின்றது. இந்த பஞ்சபூத சக்திகளின் சில புள்ளிகளைத் தூண்டி அளவுகளை சமநிலைப்படுத்தி நோயைக் குணமாக்கும் முறையினை அக்குப்பஞ்சர் மருத்துவம் என்கின்றனர்.

நமது உடலில் 14 உயிர் சக்தி ஓட்டப்பாதைகள் உள்ளன. இதில் 12 இரட்டைப் பாதைகள் உடலின் இரு பக்கமும் உள்ளது. மற்றைய இரண்டும் ஒற்றைப் பாதைகள் உடலின் முன் பக்கமும் பின்பக்கமுமாக உடலின் மத்தியில் ஓடுகின்றது. இந்த உயிர் சக்தியானது உடலில் உள்ள அக்குபஞ்சர் புள்ளிகளை கடந்தே செல்கிறது. நமது உடலில் 76,000 அக்கு புள்ளிகள் உள்ளன. அதில் 864 புள்ளிகளை மட்டுமே அக்கால சீனர்கள் கண்டறிந்தார்கள். ஆனால் தற்போது 361 புள்ளிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

சுன் அளவை என்பது அக்குபஞ்சர் புள்ளிகளின் இருப்பிடத்தை துல்லியமாக கண்டறிய பயன்படும் அளவு முறையாகும். ஒரு சுன் என்பது நோயாளியின் கட்டைவிரல் அகலத்தைக் குறிக்கும். அல்லது நடுவிரலின் இரு ரேகைகளுக்கு இடையே உள்ள மையப் புள்ளியைக் குறிக்கும்.

சக்தி ஓட்டப் பாதைகளின் மொத்தப் புள்ளிகளும் அதனுடன் தொடர்புடைய உள் மற்றும் வெளி உறுப்புக்களும். இதனுடன் தொடர்புபட்ட மூலகங்கள் (Element) மற்றும் நோய்களும்.

Lung Meridian(LU)-11 points
Large intestine Meridian (LI)- 20 points
Stomach Meridian (ST)-45 points
Spleen Meridian (SP)-21 points
Heart Meridian (H)-9 points
Small Intestine Meridian (SI)-19 points
Urinary Bladder Meridian (UB)-67 points
Kidney Meridian (K)-27 points
Pericardium Meridian (P)-9 points
Tripple Warmer Meridian (TW) - 23 points
Gallbladder Meridian (GB)-44 points
Liver Meridian (LIV)-14 points
Du Meridian (Governor Vessel) (DU)-28 points
Ren Meridian (Conception Vessel) (REN)-24 points



01. நுரையீரல் (LUNG)

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 11
தொடர்புடைய உறுப்பு - பெருங்குடல்
மூலகம் (Element) - உலோகம்
வெளிப்புற உறுப்பு - மூக்கு
நுரையீரல் சக்தி ஓட்டப்பாதை - (LU)

தீரும் நோய்கள்:-

இருமல், மார்புச்சளி, ஆஸ்துமா, தோல் நோய்கள், விரல் மூட்டுவலி, தோள்பட்டை வலி, முழங்கை வலி, சிறுநீர் விட்டுவிட்டு வெளியேறுதல், மாலை நேரத்தில் தோன்றும் காய்ச்சல், மூச்சுத்திணறல், மணிக்கட்டுவலி, நுரையீரல் நோய்கள், கழுத்து பின்புறம் ஏற்படும் வலி, தொண்டை கரகரப்பு, பக்க வாதம், திடீர் மயக்கம், அதிர்ச்சி, மனக்குழப்பம், மூக்கில் நீர் வடிதல்.

02. பெருங்குடல் (Large intestine)

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 20
தொடர்புடைய உறுப்பு - நுரையீரல்

மூலகம் (Element) - உலோகம்
வெளிப்புற உறுப்பு - மூக்கு
பெருங்குடல் சக்தி ஓட்டப்பாதை - (LI)

தீரும் நோய்கள்:-

அலர்ஜி, தோல் நோய்கள், பெருங்குடல், நுரையீரல் நோய்கள், இடுப்பிற்கு மேல் ஏற்படும் வலிகள், மணிக்கட்டு வலிகள், மலச்சிக்கல், பக்கவாதம், கைகால் செயலற்றுப் போதல், தோல் அலர்ஜி, முழங்கையில் வாதம் வலி, தோள்பட்டை வலி, பின்புற கழுத்து வலி, தைராய்டு மற்றும் திக்குவாய், சுவாசம் சம்மந்தப்பட்ட நோய்கள், மூக்கடைப்பு, தும்மல், முகவாதம்.

03. வெப்பமண்டலம் Tripple Warmer

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 23
தொடர்புடைய உறுப்பு - பெரிக்கார்டியம்
மூலகம் (Element) - நெருப்பு
வெளிப்புற உறுப்பு - நாக்கு
இரைப்பை சக்தி ஓட்டப்பாதை (ST)

தீரும் நோய்கள்:

காய்ச்சல், அதிக உடல் உழைப்பினால் வரும் உடல் வலி, உடல் நடுக்கம், குளிர் கால வலிகள், பகலில் குறைந்து இரவில் அதிகரிக்கும் வலிகள், கை வாதம், ஒருபக்கத் தலைவலி, கழுத்துப் பிடிப்பு, அதிக வியர்வை, மலச்சிக்கல், மேல் கை வாதம், முக வாதம், காது அடைப்பு, காது இரைச்சல், எரிச்சல், கண் கூசுதல், தலைவலி.

04. இருதய மேலுறை (Pericardium)

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 9
தொடர்புடைய உறுப்பு - வெப்ப மண்டலம்
மூலகம் (Element) - நெருப்பு
வெளிப்புற உறுப்பு - நாக்கு
சக்தி ஓட்டப் பாதை - (SP)

தீரும் நோய்கள்:-

இருதய வலி, இருதய படபடப்பு, குமட்டல், வாந்தி, தூக்கமின்மை, மன நோய், வலிப்பு, நெஞ்செரிச்சல், மணிக்கட்டு வலி, முடக்கு, வாதம், கை வாதம், உள்ளங்கை வியர்வை, மயக்கம், நடு இரவில் ஏற்படும் நெஞ்சு வலி.

05. சிறுகுடல் Small intestine

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 19
தொடர்புடைய உறுப்பு - இதயம்
மூலகம் (Element) - நெருப்பு
வெளிப்புற உறுப்பு - நாக்கு
இதய சக்தி ஓட்டப் பாதை - (H)

தீரும் நோய்கள்:

இடுப்பு வலி, கழுத்து வலி, இதய வலி, தாய்ப்பால் சுரப்பின்மை, மணிக் கட்டு வலி, கை வாதம், தோள்பட்டை மூட்டு வலி, ஒற்றைத் தலைவலி, பேச்சுத் திணறல், கீழ்தாடை எலும்பு வலி, செவிட்டுத்தன்மை, காது இரைச்சல், காதில் சீல் வடிதல், தலை சுற்றதல்.

06. இருதயம் HEART

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 0 9

தொடர்புடைய உறுப்பு	- சிறுகுடல்
மூலகம்(Element)	- நெருப்பு
வெளிப்புற உறுப்பு	- நாக்கு
சிறுகுடல் சக்தி ஓட்டப்பாதை	- (SI)

தீரும் நோய்கள்:

முழங்கை வலி, கை நடுக்கம், நுரையீரல் நோய்கள், ஆஸ்மா, சளி, பேச்சுத் திணறல், குரல் நாண் அலர்ஜி, இருதயக் கோளாறு, இருதய படபடப்பு, கவலை, தூக்கமின்மை, நெஞ்சுவலி, மனநோய், நரம்புத் தளர்ச்சி.

07. இரைப்பை Stomach

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள்-45

தொடர்புடைய உறுப்பு	- மண்ணீரல்
மூலகம்(Element)	- நிலம்
வெளிப்புற உறுப்பு	- உதடு
சிறுநீரக சக்தி ஓட்டப்பாதை	- (K)

தீரும் நோய்கள்:

கண் பார்வை தெளிவு பெறும், கண்நோய், அலர்ஜி, முகவாதம், முகநரம்பு, வலி, பல் வலி, தலைவலி, ஒற்றை தலைவலி, தலைப்பாரம் கண்வலி, தாய்ப்பால் சுரப்பின்மை, மார்பக நோய்கள், வயிற்றுவலி, கால்களில் ஏற்படும் பக்கவாதம், மூட்டு வீக்கம், வயிறு தொடர்பான பிரச்சினை, முழங்கால் வலி, தோள்பட்டைப் பிடிப்பு, கால்வலி, இடுப்பிற்குக் கீழே உள்ள வலிகள்.

08. மண்ணீரல் Spleen

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள்- 21

தொடர்புடைய உறுப்பு	- இரைப்பை
மூலகம்(Element)	- நிலம்
வெளிப்புற உறுப்பு	- உதடு
சிறுநீர்ப்பை சக்தி ஓட்டப்பாதை	- (UB)

தீரும் நோய்கள்:

மண்ணீரல் கோளாறுகள், மாதவிடாய் சம்பந்தப்பட்ட நோய்கள், கர்ப்பப்பை கோளறுகள், அதிக இரத்தப் போக்கு, வயிற்றுப் போக்கு, உடலில் உள்ள அடைப்புகள், இரத்த சுத்திகரிப்பு, முழங்காலுக்குக் கீழே உள்ள பிரச்சினைகள், அலர்ஜி, தோல்

நோய்கள், மூட்டுவலி, மலச்சிக்கல், வயிற்றுக் கோளாறு, அஜீரணம், பால்சுரப்பு தொடர்பான குறைபாடுகள், நெஞ்சுவலி, கல்லீரல் நோய்கள், விலா எலும்பு நோய்கள்.

09. பித்தப்பை GALL BLADDER

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள்- 44

தொடர்புடைய உறுப்பு - பித்தப்பை

மூலகம் (Element) - மரம்

வெளிப்புற உறுப்பு - கண்

இதய உறை சக்தி ஓட்டப்பாதை - (P)

தீரும் நோய்கள்:

கண்ணில் நீர்வடிதல், கண் எரிச்சல், கண் கூச்சம், தலை வலி, முகநரம்பு வலி, காது தொடர்பான குறைபாடுகள், பித்த வாந்தி, பித்த தலைவலி, கண் பார்வை தெளிவு, முன்பக்க தலைவலி, சிறுநீரக நோய்கள், கால் பக்கவாதம், கால் வலி, தொடை நரம்பு வலி, தசைகள் தசைநார் நோய்கள், கால் கை வலிப்பு, மனம் சார்ந்த நோய்கள், நரம்பு வலிகள், சுளுக்கு, பக்க வாதம், சூலப்பிடித்தல், பாதமேற்புறம் வலி, கணுக்கால் வலி, இடுப்பு வலி, தொடை நரம்பு வாதம், இடம்மாறும் வலிகள், பக்கவாட்டு வலிகள்.

10. கல்லீரல் (Liver)

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 14

தொடர்புடைய உறுப்பு - பித்தப்பை

மூலகம்(Element) - மரம்

வெளிப்புற உறுப்பு - கண்

வெப்பமண்டல சக்தி ஓட்டப்பாதை - (TW)

தீரும் நோய்கள்:

கல்லீரல் நோய்கள், பித்தப்பை நோய்கள், பின்பக்கத் தலைவலி, பித்தத் தலைவலி, கால் விரல்களில் வலி, கால் கட்டைவிரல் வீக்கம், பெருமூச்சு விடுதல், தலைவலி, உயர் இரத்த அழுத்தம், ஆண்மை குறைபாடு, விந்தணு குறைபாடு, கண் எரிச்சல், எரிச்சல் சார்ந்த வலி, இரவு நேரத்தில் ஏற்படும் வயிற்று வலி.

11. சிறுநீர்ப்பை (URINARY BILADIDER)

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் 67

தொடர்புடைய உறுப்பு - சிறுநீரகம்

மூலகம்(Element) - நீர்

வெளிப்புற உறுப்பு - காது

கல்லீரல் சக்தி ஓட்டப்பாதை - (LIV)

தீரும் நோய்கள்:

கண் எரிச்சல், கண் நோய், முன்பக்க தலைலி, கழுத்து வலி, எலும்பு சம் மந்தமான நோய்கள், மூட்டு வாதம், தோள்பட்டை வலி, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், இரத்தச் சோகை, முதுகுவலி, வாயுத் தொல்லை, இடுப்பு வலி, தோல் வியா திகள், பால் உறுப்பு சார்ந்த நோய்கள், முழங்காலுக்குக் கீழ் ஏற்படும் வலிகள், மலச்சிக்

கல், மூல நோய், தொடை நரம்பு வாதம், தசைப்பிடிப்பு, கணுக்கால் வீக்கம், உடல் எரிச்சல், சிறுநீர் கழிப்பதில் சிக்கல், வலியில்லா சுகப் பிரசவம்.

12. சிறுநீரகம் KIDNEY

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் 27

தொடர்புடைய உறுப்பு - சிறுநீர்ப்பை

மூலகம்(Element) - நீர்

வெளிப்புற உறுப்பு - காது

பித்தப்பை சக்தி ஓட்டப்பாதை - (GB)

தீரும் நோய்கள்:

மயக்கம், இனம் புரியாத பயம், மனக்கலக்கம், மழைக்கால நோய்களான ஜல தோஸம், தும்மல், சளி, காய்ச்சல், வயிற்றில் கனம், பற்கள் தொடர்பான வலிகள், ஆஸ்துமா, பாத வலிகள், சிறுநீரகக் கல்லினால் ஏற்படும் வலிகள், கணுக்கால் வீக்கம், மர்ம உறுப்புக்களில் நரம்பு தொடர்பான வலிகள், நீர் கொப்புளங்கள், நீர் வீக்கம், அலர்ஜி, அரிப்பு, எக்சிமா நோய்கள், முழங்கால் வலி, ஆண்மைக் குறைவு, முடி உதிர்வு.

13. இனவிருத்திப் பாதை

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 24

தொடர்புடைய உறுப்பு ஆளுமைப் பாதை

இனவிருத்திப்பாதை (REN)

தீரும் நோய்கள்

இனவிருத்தி, மாதவிடாய் சார்ந்த நோய்கள், சிறுநீரகப்பை சார்ந்த நோய்கள், உடல் வெப்பம், சிறுநீர் எரிச்சல் மற்றும் அடைப்புக்கள் நீங்கும், குறைந்த இரத்த அழுத்தம், உடல் சோர்வு, வாந்தி, குமட்டல், சிறுநீரகங்கள், கல்லீரல், சிறுகுடல், கர்ப்பப்பை, பித்தப்பை, பெருங்குடல், சிசேரியன், கர்ப்பத்தடை, அறுவைச் சிகிச்சையால் ஏற்படும் தொந்தரவுகள், நுரையீரல், நீர்க்கோவை மற்றும் வீக்கம், வயிறு, மண்ணீரல், இருதய மேலுறை, இருதயம், ஆற்றல் பெறுகின்றன.

14. ஆளுமைப் பாதை

சக்தி ஓட்டத் தன்மையின் மொத்த புள்ளிகள் - 28

தொடர்புடைய உறுப்பு - இனவிருத்திப் பாதை

ஆளுமைப்பாதை (DU)

தீரும் நோய்கள்:

கீழ் முதுகுவலி, ஆண்மைக் குறைவு, சிறுநீரக நோய்கள், சிறுநீரக குழாய் நோய்கள், இடுப்பு வலி, வலிப்பு, வாதம், மலச்சிக்கல், ஞாபக சக்தி, காக்கா வலிப்பு, மனநிலை பாதிப்பு, கழுத்து வலி, தோள் பட்டை வலி, தலைவலி, ஆஸ்துமா, மலேரியா, மற்றும் தொற்று நோய்கள், தூக்கமின்மை, கவலை, முடி உதிர்வு, பயம், தற்கொலை எண்ணம், மூக்கில் இரத்தக் கசிவு, மூக்கடைப்பு, கோபத்தைக் கட்டுப்படுத்தும்.

3. இலங்கை



மேல் மாகாணம் (மேற்கு மாகாணம்)

Western Province

மேல்மாகாணம் இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களில் ஒன்றாகும். இலங்கையில் மாகாணங்கள் 19ம் நூற்றாண்டு முதலே நிர்வாக அலகுகளாக இருந்து வந்த போதும், 1987 இல் இலங்கை யாப்பின் பதின்மூன்றாவது திருத்தம் கொண்டுவரப்பட்ட போதே இவற்றுக்கு சட்டபூர்வமான அந்தஸ்து கிடைத்தது. இதன் மூலம் மாகாணசபைகள் அமைக்கப்பட்டன. மேல் மாகாணம் இலங்கையில் அதிக மக்கள் தொகை கொண்ட மாகாணம் ஆகும். இம் மாகாணத்திலேயே இலங்கையின் தலை நகரான கொழும்பு சிறீ ஜெயவர்தனபுர அமைந்துள்ளது.

இலங்கைத்தீவின் மேற்குக் கரையில் அமைந்துள்ள இம்மாகாணம், வடக்கே வடமேல் மாகாணத்தையும், தெற்கே தென் மாகாணத்தையும், கிழக்கில் சப்ரகமுவா மாகாணத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது.

கொடி



எல்லை அமைப்பு 1 அக்டோபர் 1833

மாகாணசபை அமைப்பு 14 நவம்பர் 1987

மாவட்டங்கள் : கொழும்பு, ஹம்பகா, களுத்துறை

தலைநகர் : கொழும்பு

மொத்த பரப்பளவு : 3,684 சதுரகிலோமீற்றர்

மொத்த மக்கள் தொகை (2012 கணக்கெடுப்பு) : 58,21,710

இனம்(2012 கணக்கெடுப்பு)

சிங்களவர்	: 4,905,425 (84.26%)
இலங்கை முஸ்லீம்	: 450,505 (7.74%)
இலங்கை தமிழர்	: 335,751 (5.77%)
மலையகத் தமிழர்	: 61,826 (1.06%)
ஏனையோர்	: 68,203 (1.17%)

சமயம்(2012 கணக்கெடுப்பு)

பௌத்தர்	: 4,288,797 (73.67%)
கிறித்தவர்	: 752,993 (12.93%)
முஸ்லீம்	: 500,992 (8.61%)
இந்து	: 274,336 (4.71%)
ஏனையோர்	: 4,592 (0.08%)

அதிகாரபூர்வ மொழிகள்: சிங்களம், தமிழ்

மேல் மாகாண சபை

அரசியலமைப்பின் 1988 ஆம் ஆண்டு 2ம் இலக்க 3உபபிரிவு சட்டத்தின் படி, ஒவ்வொரு மாகாண சபைக்கும் அந்தந்த மாகாணத்தின் மக்கள் தொகை, நிருவாகப் பிரிவு, வேறு காரணங்களைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளர் உறுப்பினர் தொகையைத் தீர்மானிப்பார். இச்சட்டமூலத்தின் 13ம் பிரிவின் படி, மாகாண சபைக்கு போட்டியிட விரும்பு வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்று அல்லது சுயேட்சைக் குழு ஒன்றின் சார்பில் போட்டியிடலாம். இவ்வாறு போட்டியிடுபவர் மாகாணத்திற்குள் உள்ள நிர்வாக மாவட்டம் ஒன்றுக்கே போட்டியிடலாம். முழு மாகாணத்திற்கும் போட்டியிட முடியாது. இந்த வகையில் மேல் மாகாணசபைக்கு 104 பேர் தெரிவு செய்யப்படுகின்றனர்.

04. கங்காரு (Kangaroo)

திணை : விலங்கினம்

தொகுதி : முதுகுநாணி

வகுப்பு : பாலூட்டி

வரிசை: டைபுரோட்டோடோண்டியா

குடும்பம்:மேக்ரோபோடிடே

இனங்கள் : மேக்ரோபஸ் ரூஃபஸ், மேக்ரோபஸ் ஜைஜான்டியஸ், மேக்ரோபஸ் ஃபுலிஜினோஸஸ், மேக்ரோபஸ் ஆன்டிலோபினஸ்

பாலூட்டி இனத்தைச் சேர்ந்த கங்காருகள் பொதுவாக ஆஸ்திரேலியா மற்றும் அதன் அருகில் உள்ள தீவுகளில் வாழ்கின்றன. இவற்றிற்கு சிறிய இரு முன்னங்கால்களும் பெரிய இரு பின்னங் கால்களும் காணப்படுகின்றன. இவற்றில் பெரிய இரு பின்னங்கால்களையும் பயன்படுத்தி இவை தத்திக் குதித்துப் பயணிக்கின்றன. சமநிலையை பேண தனது வாலைப் பயன்படுத்துகின்றது. வலிமையான பின்னங்கால்களையும் நீண்ட பாதங்களையும் உடைய கங்காருகள் மணிக்கு 40 முதல் 60 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கின்றன. கங்காரு பெரிய அளவில் சத்தமெழுப்பாது. தரையில் கால்களைத் தட்டி ஒலியெழுப்பி குட்டியை அழைக்கவும், ஆபத்து எச்சரிக்கையினை விடுக்கவும் செய்கின்றது.

கங்காருக்கள் இரவுநேரங்களில் சுறுசுறுப்பாக இயங்கி உணவைத் தேடி உட்கொள்கின்றன. இவை பெரும்பாலும் புற்களையே விரும்பி உண்கின்றன. பகல் முழுவதும் மரநிழலிலும், பாறையிடுக்குகளிலும், படுத்து ஓய்வெடுக்கின்றன. இவ்வேளையில் இரவில் உண்ட உணவை அசைபோட்டு உண்கின்றன. இவை மிகக் குறைந்த அளவு தண்ணீரையே குடிக்கும். தண்ணீர் இல்லாமலும் பல மாதங்கள் உயிர்வாழக் கூடியவை.

கங்காருகளில் சிவப்புக் கங்காரு, ஈஸ்டர் கங்காரு, வெஸ்டர்ன் க்ரே கங்காரு, ஆண்டிலோப் கங்காரு என 4 வகை கங்காருகள் காணப்படுகின்றன. இவற்றில் சிவப்புக்

கங்காருவே மிகவும் பெரியது. மார்சுபியல் வகையைச் சேர்ந்த விலங்குகளில் கங்காருவே மிகப் பெரியது. நிற்கும் போது இதன் உயரம் ஆறடி இருக்கும். இதன் எடை 85 கிலோ வரை இருக்கும். கங்காரு இனங்களிலேயே அறுபதுக்கும் மேற்பட்ட பிரிவுகள் உள்ளன. குளிர் பிரதேசம், பாலைவனம், மலைக்காடுகள், கடலோரப் பகுதிகள் என வெவ்வேறு காலநிலை நிலவும் பிரதேசங்களில் அவற்றின் சூழலுக்கேற்ற கங்காருகள் தங்கள் வாழ்க்கைமுறையை அமைத்து வாழ்கின்றன.

கங்காருகள் நன்றாக நீந்த வல்லன. ஆபத்து வரும்போது பக்கத்தில் ஏதாவது நீர்நிலை இருப்பின் அதற்குள் குதித்து தப்பித்துவிடுகின்றன. கங்காருகள் குழுக்க ளாகத்தான் வாழும். ஒரு குழுவில் பத்து முதல் நூறு வரையிலான கங்காருகள் இருக்கும். இதன் எதிரிகளாக டிங்கோ நாய்கள், நரிகள், காட்டு நாய், பூனைகள் மற்றும் மனிதர்களைக் குறிப்பிடலாம். பொதுவாக கங்காருகள் மனிதர்களை தாக்காது. எனினும் அவர்களால் தமக்கு ஆபத்து ஏற்படுமாயின் தாக்கிவிடுகின்றன.

கங்காரு வருஷத்துக்கு ஒரு குட்டியையே ஈனும். அதனுடைய கர்ப்பகாலம் 33 நாட்கள்தான். இதனால் பிறக்கும் போது குட்டியின் எடை இரண்டுகிராம் தான். கண், காது, கால், உடல் என்று எதுவுமே முழுமையாக உருவாகாத நிலையில் தான் குட்டி பிறக்கின்றது. இதனால் இக் குட்டியினை தாயால் தொடக்கூட இயலாது இருப்பினும் தாய், குட்டி, பைக்குள் போகும் பாதையை நக்கி சுத்தம் செய்து விட குட்டி தனது முன்னங்கால் விரல்களால் தாயின் வயிற்று ரோமத்தைப் பற்றியவாறு நகர்ந்து நான்கு அல்லது ஐந்து நிமிடத்தில் அந்த பைக்குள் சென்றுவிடும். குட்டி பால் அருந்துவதற்கான முலையும் இந்தப் பையினுள்ளே இருக்கின்றது. கங்காருவின் குட்டி பிறந்த மறு நொடியே உள்ளுணர்வு காரணமாக உந்தப்பட்டு தனக்கான உணவை பெற்றுக்கொள்வதற்காக தன் தாய்மடியிலுள்ள பையை நோக்கி நகர்கிறது. தாயின் பையினுள் இருந்து குட்டி ஆறு மாதங்களில் முழுவளர்ச்சி பெற்றுவிடும். அவ்வப்போது தலையை வெளியே நீட்டி பார்க்கும். குட்டி வளர வளர மெல்ல மெல்ல வெளியில் வந்து தனக்கான உணவைத் தேடிக்கொள்ளும் . ஆயினும் தாயின் கண்காணிப்பிலே இருக்கும்.

பொதுவாகவே கங்காரு ஒரு குட்டி ஈன்றாலும் உடனே இனப்பெருக்கத்தில் ஈடுபடும். ஆனால் தாயானது மனம் வைக்கும்வரை அக் கருவானது கருப்பைக்குள் வளராது பத்திர மாக இருக்கும். ஏற்கனவே பிறந்த குட்டி நன்கு வளர்ந்து பைக்குளிருந்து வெளியேறும்வரை காத்திருக்கும். அத்துடன் நல்ல உணவு கிடைத்து, நல்லமுறையில் பால்கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கை தாய்க்கு வந்தால்தான் அக் கருவை குட்டியாக ஈனத் தயாராகும்.

அவுஸ்ரேலியாவில் குடியேறிய வெள்ளையர்கள் அந்நாட்டுப் பழங்குடி மக்களிடம் தாம் கண்ட இவ் அரிய வகை விலங்கைக் காட்டி இதன் பெயர் என்ன எனக் கேட்ட பொழுது மொழி புரியாத அவர்கள் காங்காரு (தெரியாது) என தமது மொழியில் கூறினராம். இதுவே பின்னர் இதன் பெயரானது எனக் கூறப்படுகிறது.

கங்காருகள் அவற்றின் இறைச்சிக்காகவும் தோலுக்காகவும் கொல்லப்படுகின்றன. கங்காரு இறைச்சியில் கொழுப்புத் தன்மை குறைவாகக் காணப்படுவதால் இது மனிதர்களுக்கு நன்மையளிக்கும் உணவாகின்றது. கந்காருவினை வேட்டையாடுவதற்கு உலகில் பல நாடுகளும் அமைப்புக்களும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனாலும் இவற்றை மீறி கங்காரு வேட்டை தொடர்ந்த வண்ணம் தான் உள்ளது.

05 .மடகஸ்கார் குடியரசு



இந் நாடு தென்கிழக்கு ஆபிரிக்கக் கரையோரமாகவுள்ளது. இந்தியப்பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு தீவு நாடாகும். இது உலகில் உள்ள தீவுகளில் நான்காவது பெரிய தீவு ஆகும்.

1897 ம்ஆண்டு பிரான்ஸின் காலணித்துவ ஆட்சிக்கு உட்பட்ட மடகஸ்கார் 1960 ம் ஆண்டு யூன் மாதம் 26 ம் திகதி அந்நாட்டிடமிருந்து விடுதலை பெற்று சுதந்திரநாடானது.

இந்நாட்டில் தற்போது 69 வீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்றனர்.

- ❖ பரப்பளவு - ஏறத்தாள 5 லட்சத்து 88 ஆயிரம் சதுரகிலோமீற்றர்களாகும்
- ❖ சனத்தொகை - 24 மில்லியன்(2016 ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி)
- ❖ மொழி - மலகாசி.பிரெஞ்
- ❖ தலை நகரம் - அன்ரனானறிவோ Antananarivo
- ❖ நாணயம் - மலகாசி அரிஅரோMalagasy ariary (MGA)
- ❖ ஐ.நா வின் உறுப்புரிமை 1960 September 20

88 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற உயர்கண்ட பிரிவின் காரணமாக மடகஸ்கார் தீவானது இந்தியக் குடா நாட்டிலிருந்து பிரிவடைந்து தனி தீவானது. இந் நிகழ்வின் போது இந்தியாவிலிருந்த சில தாவரங்களும் விலங்குகளும் மடகஸ்கார் தீவிலும் தக்கவைக்கப்பட்டன. இந் நாடு .இயற்கை எழில்மிகு காடுகளினையும், புல்வெளிகளினையும் கொண்டுள்ளது. இங்குள்ள சில தாவரங்கள், விலங்குகள், பறவைகள் அழகிய வண்ணத்துப்பூச்சிகள், பூச்சிகள், புழுக்கள் எனப் பலவற்றை வேறு எங்குமே காண முடியாது. இந்நாட்டிற்கு அழகு சேர்க்கும் இவை சுற்றுலாப்பயணிகளின் பார்வையினை தம்பக்கம் ஈர்த்துக்கொள்கின்றன.அத்துடன் இங்குள்ள ஆறுகளிலும் ஏரிகளிலும் காணப்படும் 100 இற்கும் மேற்பட்ட வகையான மீன்களும் 80 இற்கு மேற்பட்ட இனங்களைச் சேர்ந்த நச்சில்லாப்பாம்புகளும் இந்நாட்டிற்கு பெருமை தேடித்தருகின்றன.

1960ம் ஆண்டு யூன் 26 அன்று சுதந்திரமடைந்த இந் நாடு தற்போது 2010 November 17ல் நடைமுறைக்கு வந்த அரசியலமைப்புக்கு அமைவாக அரசாங்கத்தை கொண்டுள்ளது. இவ் அரசாங்கமானது 33 உறுப்பினர்களைக் கொண்ட மேற் சபை (செனற் சபை), 127 அங்கத்தவர்களைக் கொண்ட கீழ் சபை (தேசிய ஒன்று கூடல் சபை) என்பவற்றுடனான நாடாளுமன்றத்தினையும் மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படுகின்ற

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியையும் அவரால் தெரிவு செய்யப்பட்ட பிரதமரையும் கொண்டு விளங்குகின்றது. இந் நாட்டு அமைச்சரவையினை சபைகளை சேர்ந்தவர்கள் தெரிவு செய்ய ஜனாதிபதி நியமனம் செய்கின்றார்.

மடகஸ்காரின் ஆரம்பக் குடிகள் அதாவது ஏறத்தாழ இற்றைக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் குடியேறியுள்ளதாக தொல்பொருள் ஆய்வுகள் மூலம் தெரியவந் துள்ளது. பல்வேறு காலங்களில் போர்னியோ,தென்னாபிரிக்கா என பல நாடுகளிலிருந்து மக்கள் இந்நாட்டில் குடியேறினர். இவர்களில் பெரும்பாலானோர் மலகாசி கலாச்சாரத்தை பின்பற்றி தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர். மலகாசி இனப்பிரிவானது ஆரம்பத்தில் 18 உப பிரிவுகளாகவும் பின்னர் அதற்கும் மேற்பட்ட பல உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. 18 ம் நூற்றாண்டின் இறுதி வரை மடகஸ்காரானது இச் சமூகத்தால் ஆளப்பட்டது.



06. கற்பூரவள்ளி (Coleus aromaticus)

உயிரியல் வகைப்பாடு
திணை: தாவரம் பூக்கும் தாவரம்
வரிசை: Lamiales
குடும்பம்: Lamiaceae
பேரினம்: Plectranthus
இனம்: P. amboinicus

கற்பூரவள்ளி இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் காணப்படும் ஒரு மருத்துவ மூலிகைச் செடியாகும். புதராக வளரும், வாசனை மிக்க இச்செடியின் தண்டு முள்போல நீண்ட மயிர்த் தூவிகளைக் கொண்டிருக்கும். இதன் இலைகள் தடிப்பாகவும் மெது மெதுப்பாகவும் இருக்கும். இவை கசப்புச் சுவையும் காரத்தன்மையும் வாசனையும் கொண டவை. கற்பூரவள்ளி இலையைக் கையால் தொட்டுத் தடவி, முகர்ந்தால் ஓமத்தின் மணம் தரும். இலையில் சுரக்கும் ஒருவிதமன ஆவியாகும் தன்மையுடைய நறுமண எண்ணெய் இந்த மணத்திற்குக் காரணமாகும். கற்பூரவள்ளி தண்டுகள் மெல்லியதாகவும், வளைந்தும், ஒடியும் தன்மையுடனும் இருக்கும். இவற்றின் பூக்கள் நீலநிறமானதாகவும் கொத்துக் களாகவும் காணப்படும். இச் செடி வீடுகளில் பெருமளவில் வளர்க்கப்படுகிறது.

மருத்துவக் குணங்கள்

கற்பூரவள்ளி குளிர்காய்ச்சல், இருமல், அஜீரணம், காசநோய், கபக்கட்டு, அம்மைக் கொப்புளம் போன்றவற்றை குணப்படுத்த வல்லது. குழந்தைகளுக்கு கற்பூரவள்ளி பல வழிகளிலும் பயன் தருகின்றது.

கற்பூர வள்ளியின் இலைச்சாற்றினை பனங்கற்கண்டுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் இருமல் நீங்கும். அத்துடன் மந்தமும் விலகும். வளர்ந்த குழந்தைகளின் மார்பில் உள்ள சளியைப் போக்க பசுமையான கற்பூரவள்ளி இலைகளைத் தேவையான அளவு சேகரித்துக் கொள்ள வேண்டும். இதனை, இளஞ்சூட்டில் வதக்கி, சாறு எடுத்து, ஒரு தேக்கரண்டி அளவு சாற்றுடன், அதே அளவு தேன் கலந்து குடிக்கக் கொடுக்க வேண்டும். வளர்ந்த குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல் குணமாக ஒரு தேக்கரண்டி கற்பூரவள்ளி இலைச் சாற்றுடன சர்க்கரை கலந்து கொடுக்க வேண்டும்.

கற்பூரவள்ளி இலைச் சாற்றுடன் நல்லெண்ணெய்யைக் கலந்து நெற்றியில் பூச தலை வலி குணமாகும்.

இன்று குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் வாட்டி வதைக்கும் நோய்களில் ஆஸ்துமாவும் முக்கியமானது . இன்று இயற்கைச் சூழல் பாதிப்புறுவதால் காற்றின் தூய்மை பாதிப்புறுகிறது. இதனால் ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக மூச்சிழைப்பு ஏற்படுகிறது. இவர்கள் தினமும் காலையில் கற்பூரவள்ளி இலையின் சாறெடுத்து அதனுடன் பனங்கற்கண்டு அல்லது தேன் கலந்து அருந்திவந்தால் ஆஸ்துமா வினால் உண்டான பாதிப்புகளிலிருந்து படிப்படியாகக் குணமடையலாம். மூக்கில் நீர் வடிந்து அது சில நாட்களில் சளியாக மாறி இருமலை ஏற்படுத்திவிடும். இவர்கள் கற்பூரவள்ளி இலையின் சாறை எடுத்து தேன் கலந்து அருந்தி வந்தால் சளி மற்றும் இருமல் தொல்லை யிலிருந்து விடுபடலாம். காசநோயால் உண்டான பாதிப்புகள் குறைய கற்பூரவள்ளி சிறந்த மருந்தாகும். கற்பூரவள்ளி இலையை சாறு எடுத்து அதனுடன் தேன் கலந்து அருந்தி வந்தால் காச நோயால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும்.

கற்பூரவள்ளியின் மருத்துவ குணத்தைக் கூறும் ஒரு செய்யுள்
காச இருமல் கதித்தம சூரியயையும்
பேசுபுற நீர்க்கோவை பேருங்காண் -வீசுசுரங்
கற்பாறை யொத்துநெற்சிற் கட்டுகபம் வாதமும்போங்
கற்பூர வள்ளிதனைக் கண்டு
தேரையர் குணபாடம்ஜதொகுஸ
கற்பூர வள்ளியின் கழறிலை யைத்தின
நற்பாலர் நோயெலா நாசமா யகலுமே

கற்பூரவள்ளியை ஓமவள்ளி என்றும் அழைப்பர். கற்பூரவள்ளி ஒரு கிருமி நாசினியாகும். வீட்டிலும் சுற்றுப்புறத்தை பாதுகாக்கும். வீட்டைச் சுற்றி கற்பூரவள்ளியை நட்டு வளர்த்தால் விஷப் பூச்சிகள் தொல்லையிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.

கற்பூரவள்ளி தண்டு மூலம் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது. இத்தண்டினை தொட்டியில் வைத்தும் வளர்க்கலாம். இதன் வேர்கள் கொத்தாக இருக்கும் அதிக ஆழத்துக்குச் செல்லாது.இது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மிகுந்த பலனளிக் கக் கூடியது.கற்பூரவள்ளி வறண்ட சமவெளிகள், சரிவான நிலப்பகுதிகளில், கொத்தாக வளர்ந்து பல ஆண்டுகள் உயிர் வாழ்கின்றன. பல வழிகளிலும் பயன்தரும் கற்பூவள்ளிச் செடியினை நாமும் வளர்த்து பயன்பெறுவோமாக.

7. கம்போடியா

Banner logo

அங்கோர் வாட்

அங்கோர் வாட் (Angkor Wat) என்பது, கம்போடியாவில் அங்கோர் நகரில் உள்ள ஒரு இந்து மத கோயிலாகும். இது கி.பி 1113-1150 வரைக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 2ம் சூரிய வர்மனால் கட்டப்பட்டது.

உலகில் மிகப்பெரிய வழிபாட்டுத்தலமாகிய இவ்வாலயம் ஏறத்தாழ 162.6 ஏக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.



விஷ்னு ஆலயமாகிய இது தற்போது புத்தமத வழிபாட்டு இடமாக உள்ளது.

ஆங்கோர் வாட் என்பது கெமர் மொழிச்சொல் ஆகும். இதில் அங்கோர் என்பது நகரத்தையும், வாட் என்பது கோயிலையும் குறிக்கிறது. இக் கோயிலின் படம் அந்நாட்டு தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

அங்கோர் அக்காலத்தில் யசோபுரம் என அழைக்கப்பட்டது. இது மாநில கோயிலாக வும், கல்லறை மாடமாகவும் இருந்தது.

அங்கோர் வாட், சியம் ரீப்பின் நவீன நகரத்தின் வடக்கே 5.5 கிலோமீட்டர் தொலை வில், முந்தைய தலைநகரமான பாஃபுஆனுக்கு சற்றே தென் கிழக்கில் அமைந்துள்ளது. இக்கோவிலின் தொடக்க வடிவமைப்பும், கட்டுமானமும் 12ஆம் நூற்றாண்டில் இரண்டாம் சூரியவர்மனால் ஆரம்பிக்கப்பட்டது. இக்கோயில் விஷ்ணுவுக்காக அர்ப்பணிக்க பட்டிருந்தாலும் அரசனின் மாநிலக்கோவிலாகவும், தலைநகரக் கோவிலாகவும் இருந்தது. இக்கோயிலின் உண்மையான பெயர் தெரியவில்லை. இரண்டாம் சூரியவர்மனின் மறைவுக்கு பின்னரே இக்கோயில் முழுத்தோற்றம் பெற்றது. 1177ஆம் ஆண்டளவில் இரண்டாம் சூரியவர்மன் மறைந்து 27 வருடங்களுக்கு பின், அங்கோரை கெமரின் பாரம்பரிய எதிரிகளான சம்பாக்கள் கைபற்றினர். அதன் பின்னர் புதிய அரசர் ஏழாம் ஜயவர்மன் சிறிது தூரம் வடக்கே தள்ளி தன் புதிய தலைநகரத்தையும், மாநில கோவிலையும் நிறுவினார். 13ஆம் நூற்றாண்டில் அங்கோர் வாட், இந்து கோவில் தேரவாத புத்த மத வழிபாட்டுத்தலமானது. 16ஆம் நூற்றாண்டிலேயே அக்கோயில் ஓரளவு புறக்கணிக்கப்பட்டு வந்தாலும் முழுமையாக கைவிடப்படவில்லை, ஏனெனில், அக்கோயிலின்அகழி காட்டின் அத்துமீறலில் இருந்து சிறிது பாதுகாப்பளித்தது.

இக்கோயில் கடவுள்களின் இருப்பிடமாகக் கருதப்படும் மேரு மலையினைக் குறிப்பதாக உள்ளது. மத்திய கோபுரங்கள், மேரு மலையின் ஐந்து சிகரங்களைக் குறிக்கின் றது. சுவர்களும், அகழியும், பிற மலைத்தொடர்களையும், கடலையும் குறிக்கின்றது. இக்கோயில் நகரத்தில் இருந்து சிறிது உயர்த்தப்பட்ட ஒரு தளத்தின் மீது அமைந்துள்ளது. மூன்று சதுர கூடங்கள், மத்திய கோபுரத்துடன் இணைந்துள்ளது. முதல் மண்டபம் வெளிப் புறம் சதுரத் தூண்களையும், உட்புறம் மூடிய சுவரையும் கொண்டுள்ளது. தூண்களுக்கு இடைப்பட்ட விதானம் தாமரைவடிவ அலங்காரங்களைக் கொண்டுள்ளது. மூடிய சுவர் நடன

உருவங்களால் அலங்கரிக் கப்பட்டுள்ளது. இச்சுவரின் வெளிப்புறம் தூண்களோடு கூடிய பலகணிகள், விலங் குகளின் மீதமர்ந்து நடன மாடும் ஆண் உருவங்கள் முதலியவற்றால் அலங் காரம் செய்யப்பட்டுள்ளது. எல்லா மண்டபங்களின் சுவர்களிலும் அப்சரஸ் உரு வங்கள் காணப்படுகின்றன. முதல் மண்டபத்திலிருந்து நீண்ட வழிமூலம் இரண்டாவது மண்டபத்தை அடைய முடியும். இங்கு இரண்டு பக்கங்க ளிலும் சிங்கச்சிலைகள் அமைந்த படிக்கட்டுகள் காணப்படுகிறன. இரண்டாவது மண்டபத் தின் உட்சுவர்களில் வரிசையாக அமைந்த புடைப்புச் சிறபங்கள் காணப்படுகின்றன. மேற்குச் சுவரில் மகாபாரதக் காட்சிகள் காணப்படுகின்றன. மூன்றாவது மண்டபம், உயர்ந்த மேல்தளத்தில் ஒன்றோடொன்று மண்டபங்களால் இணைக்கப்பட்ட ஐந்து கோயில்களைச் சூழ அமைந்துள்ளது. மண்டபங்களின் கூரைகள், பாம்புகளின் உடல்களையும், சிங்கம் அல்லது கருடனின் தலையையும் கொண்ட உருவங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மேற்குப் பக்கத்திலுள்ள முதன்மைக் கோயிலின் வெளி முற்றத்தில் இரண்டு நூலகங்கள் போன்ற சிறிய கோவில் அமைப்புக்கள் உள்ளன. அகழியைச் சுற்றியுள்ள புல்வெளிகளில் பூங்காக்கள் உள்ளன.



இந்திய தொல்பொருள் ஆராய்சி நிறுவனம் 1982 மற்றும் 1992களில் இக்கோயிலின் புதுப்பித்தல் பணியினை செய்தது. ஜேர்மன் அப்சரா பாதுகாப்பு திட்டம், இக்கோயிலின் அலங்காரத்தையும், கட்டமைப்பையும் பாதுகாத்து வருகிறது.

சுற்றுலா பயணிகளின் வருகை மூலம் கிடைக்கும் நிதி இக்கோயிலைப் பாதுகாக்க பெரும் அளவில் உதவியது. ஆனால் அதிக அளவு பார்வையாளர்களின் வரவால் இக்கோயிலின் சுற்று வட்டாரம் மாசுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே இதைக் கட்டுப் படுத்த யுனெஸ்கோவும் அதன் சர்வதேச ஒருங்கிணைப்புக் குழுவும் சேர்ந்து அதனைப் பாது காக்க முடிவு செய்துள்ளது. பிரான்சு, ஜப்பான் மற்றும் சீனா போன்ற பல நாடுகளும் தற்போது அங்கோர்வாட்டை பாதுகாக்க முன் வந்துள்ளன.



08. விமானிகளின் பார்வைக்கெட்டிய பறக்கும் தட்டு

இப்போது ஏலியன்கள் விமானம் என்று அழைக்கப்படும் பறக்கும் தட்டு (Av/gX (UFO- Unidentified flying object) பற்றிய நிறைய ஆராய்ச்சிகள், விவாதங்கள் என்பன இடம்பெற்று வருகின்றன. பூமியில் நிறைய பேர் இந்த பறக்கும் தட்டை பார்த்தாக கூறி இருக்கிறார்கள். இதனால் உலகம் முழுக்க ஏலியன்கள் குறித்த விவாதங்கள் அதிகம் ஆகியுள்ளது. அதே சமயம் இதெல்லாம் கட்டுக்கதை என்று மறுப்பவர்களும் உள்ளனர்.

ஏலியன்கள் பயன்படுத்தும் வாகனம் என்று கூறப்படும் பறக்கும் தட்டுகளை பார்த்ததாக அயர்லாந்தில் விமானிகள் அண்மையில் வாக்குமூலம் அளித்துள்ளனர். நான்கு விமானிகள் அயர்லாந்து அருகே பறந்து கொண்டு இருந்த போது இந்த பறக்கும் தட்டை பார்த்ததாக கூறியுள்ளனர். ஒரே நேரத்தில் குறித்த பகுதியில் நான்கு விமானங்கள் பறந்து இருக்கிறன. இந்த நான்கு விமானத்தை சேர்ந்த விமானிகளும், அந்த பறக்கும் தட்டை பார்த்ததாக வாக்குமூலம் அளித்ததுதான் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. அதிக வேகத்தில் மிகுதியான வெளிச்சத்துடன் பறக்கும் தட்டுக்கள் சென்றதாக விமானிகள் கூறியுள்ளனர். மூன்று விமானிகள், 2 பறக்கும்தட்டை பார்த்ததாக கூறியுள்ளனர். ஒரு விமானி, "பறக்கும் தட்டொன்று நான் ஓட்டிய விமானத்திற்கு அருகே மெதுவாக வந்துவிட்டு பின் வேகமாக" பறந்துவிட்டது என்று கூறியுள்ளார்.

இதற்காக சில ஆதாரங்களை அவர்கள் வெளியிட்டுள்ளனர். விமானத்தின் உள்ளே இருக்கும் கறுப்பு பெட்டியின் ஒடியோ பதிவு செய்யும் கருவியில் இதற்கான ஆதாரம் உள்ளது என்கிறார்கள். அந்த பறக்கும் தட்டு அந்த விமானம் அருகே சென்ற போது பெரிய அளவில் சத்தம் எழுப்பியுள்ளது. இந்த வித்தியாசமான சத்தம் அந்த ஒடியோ கருவியில் பதிவாகி உள்ளதாகவும், அதை ஆதாரமாக காட்ட போவதாகவும் கூறியுள்ளனர். இப்படி ஒரு சாதனத்தை தங்கள் வாழ்நாளில் பார்த்தது இல்லை என்றும் கூறியுள்ளனர். மனிதர்கள் கண்டுபிடித்த பறக்கும் சாதனங்களின் வேகத்தை விடவும் இது அதிக வேகமானது என்று கூறியுள்ளனர்.



9.திருவள்ளுவர்

உலகை அளக்க வாமணனுக்கு மூன்று அடிகள் தேவைப்பட்டது. ஆனால் திருவள்ளுவருக்கு இரண்டடிகளே போதுமானதாய் இருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருவர் எழுதிய செய்யுள் இன்றளவும் மனிதனை அறநெறியில் வாழ வழிநடத்துகிறது என்றால் அந்த நூலில் உள்ள சிறப்புக்கள் எந்தளவு வலிமையானதாக இருக்கும்?,இதனால் தான் சாதி, மத, பேதங்களை கடந்த இந் நூலை மக்கள் அவரவர் மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்தனர்.

வள்ளுவரின் பெருமையை திருவள்ளுவமாலை எனும் நூலின் மூலமாக அறியலாம்.

பாரதியார்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு" - என்றும்

பாரதிதாசன்,

"வள்ளுவனைப் பெற்றதால்
பெற்றதே புகழ் வையகமே"

என்றும் இவரின் புகழினைச் சிறப்பித்துள்ளனர்.

திருவள்ளுவர் இவ்வளவு தூரம் புகழினைப் பெறக் காரணம் அவர் தந்த திருக்குறளே ஆகும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று தொடங்கி, ஈரடிகளில் உலகத் தத்துவங்களை சொன்ன இந் நூல் "ஈரடி நூல்" என்றும், அறம், பொருள், இன்பம் (காமம்) என்னும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டதால், "முப்பால்" என்றும் அழைக்கப்படுகிறது. இந்நூலானது மனிதர்கள் தம் அகவாழ்வில் சுமுகமாக கூடி வாழவும், புற வாழ்வில் இன்பமுடனும், இசைவுடனும், நலமுடனும் வாழவும் தேவையான அடிப்படைகளைக் கொாண்டுள்ளது.

முதல் பிரிவான "அறத்துப்பாலில்" மனசாட்சி மற்றும் மரியாதை, நல்ல நடத்தை போன்றவற்றை பாயிரவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல் என்ற உட்பிரிவுகள் ஊடாகவும், இரண்டாவது பிரிவான "பொருட்பாலில்" உலக விவகாரங்களில் எவ்வாறு சரியான முறையில் நடந்து கொள்வது என்பதை அரசியல், அமைச்சியல், அங்கவியல், ஒழிபியல் போன்ற உட்பிரிவுகள் ஊடாகவும், மூன்றாவது பிரிவான "இன்பத்துப்பால்" அல்லது "காமத்துப்பாலில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையேயான காதல் மற்றும் இன்பத்தைத் தெளிவாக களவியல், கற்பியல் என்ற தலைப்புகள் ஊடாகவும் எடுத்துரைக்கிறார். 133 அதிகாரங்களின் கீழ் 1330 குறட்பாக்கள் ஊடாக உலகியல் கருத்துக்களினை இந் நூலுக்குள் அடக்கியுள்ளார். இது தவிர திருவள்ளுவர் "ஞான வெட்டியான்" மற்றும் "பஞ்ச ரத்னம்" ஆகிய இரு மருத்துவ நூல்களையும் இயற்றியுள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர்.

திருக்குறளைப் படைத்து, உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைப்பெற செய்தவர். இவர் உலக மக்களால், "தெய்வப்புலவர்", "பொய் யில் புலவர்", "நாயனார்தேவர்", "செந்நாப்போதர்", "பெருநாவலர்", "பொய்யாமொழிப் புலவர்" என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்

திருவள்ளுவரின் பிறப்பு மற்றும் பிறப்பிடத்திற்கான சரியான சான்றுகள் இல்லை என்று தான் கூறவேண்டும். இவர் ஒரு ஞானியா? தீர்க்கதரிசியா? என பல சந்தேகங்கள் உண்டு. அவர் கி.மு.31 ஆம் ஆண்டில் மதுரையில் பிறந்ததாக கூறுகின்றனர் ஆனால் கி.மு 1 ஆம் நூற்றாண்டில் சென்னைக்கு அருகே உள்ள மயிலாப்பூரில் பிறந்ததாக தமிழக அரசு கூறியுள்ளது. எனினும் இவர் பற்றிய குறிப்புக்கள் மதுரை ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் எனும் பாண்டிய மன்னனின் கடைச்சங்க ஆட்சிக் கால ஓலைச்சுவடிகளில்

குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குறிப்பில் திருவள்ளுவர் திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுவதற்கு சிரமபட்டதாகவும் முடிவில் ஔவையாரின் உதவியுடன் திருக்குறளை அரங்கேற்றினார். என்றும் கூறப்பட்டுள்ளது.

திருக்குறளை எழுதி, உலக இலக்கிய அரங்கில், தமிழர்கள் பெருமிதமாக நெஞ்சம் நிமிர நிற்கும்படி செய்த உன்னதப் படைப்பாளி, திருவள்ளுவர். தன் அறிவாலும் சிந்தனையாலும் அவர் எழுதிய திருக்குறள், உலகப்புகழ் பெற்ற இலக்கியமாக மாறி, தமிழர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்நூல், சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் திரட்டில் இருக்கிறது. மேலும், வாழ்வியலின் எல்லா அங்கங்களையும் இனம், மொழி, பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறி உள்ளதால், திருக்குறளை சிறப்பிக்கும் விதமாக "உலகப் பொது மறை", "முப்பால்", "ஈரடி நூல்", "உத்தரவேதம்", "தெய்வ நூல்", "பொதுமறை", "பொய்யாமொழி", "வாயுறை வாழ்த்து", "தமிழ் மறை", "திருவள்ளுவம்" போன்ற பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கப்படுகின்றது.

திருவள்ளுவர் ஆதி, பகவன் என்போருக்கு பிறந்ததாக சொல்கின்றனர். காவிரிப்பாக்கம் அருகில் உள்ள மார்க்செயன் திருவள்ளுவரின் கவித்திறனைக் கண்டு அவரது புதல்வியான வாசுகியை வள்ளுவருக்குத் திருமணம் செய்து வைத்ததாகவும் கூறப்படுகிறது. இவள் கற்பு நெறிமிக்கவளாய் திகழ்ந்தாள். இவள் கிணற்றில் நீர் அள்ளும் போது கணவர் அழைக்கையில் உடனே சென்று விடுவாள் அப்பொழுது அந்த வாளி அவள் விட்டு செல்லுமிடத்திலேயே நின்று விடுவதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவின் தென் கோடியில் உள்ள முக்கடல் சங்கமிக்கும் இடமான கன்னியாகுமரியில், வள்ளுவரின் புகழைப் பறைசாற்றும் விதமாக அவருக்கென்று பிரம்மாண்டமான சிலை ஒன்று தமிழக அரசால் நிறுவப்பட்டுள்ளது. 133 அடி உயரமுள்ள இச்சிலை, 30 அடி உயரமுள்ள பாறை மீது அமைந்துள்ளது. இதனை அமைக்க 10 ஆண்டுகள் தேவைப்பட்டது என இதை வடிவமைத்த சிற்பி கணேசன் கூறியுள்ளார். மேலும், சிலையின் உட்புறச் சுவற்றில் ஒவ்வொரு அதிகாரத்திலிருந்து ஒரு குறள் வீதம் 133 குறட்பாக்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவர் நினைவாக, சென்னையில் "வள்ளுவர் கோட்டம்" அமைக்கப்பட்டுள்ளது. இவர் இயற்றிய திருக்குறளின் 1330 குறள்களும், இங்குள்ள மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. லண்டனிலுள்ள ரஸ்ஸல் ஸ்கொயரில் இருக்கும் "ஸ்கூல் ஆஃப் ஓரியண்டல் மற்றும் ஆப்ரிக்கன் ஸ்டடீஸ்" என்னும் கல்வி நிறுவனத்தில், அவரது திருவுருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் மறைந்தாலும், அவர் படைத்த திருக்குறள் என்னும் உன்னத நூல், எக்காலமும் மனிதர்களுக்கு ஓர் வழிகாட்டியாக இருந்து தமிழர்களின் புகழை உலகளவில் ஓங்கச் செய்யும்

10 .ஜல்லிக்கட்டு

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில், மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் 20.01.2019 துவங்கிய ஜல்லிக்கட்டுப் போட்டியில், 9 மணி நேரத்தில் 1,353 காளைகள் அவிழ்த்து விடப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அம்மன் குளம் பட்டமரத்தான் கருப்பசாமி கோயில் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்றது. கின்னஸ் சாதனை முயற்சிக்கான இந்த மாபெரும் ஜல்லிக்கட்டுப் போட்டியை முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, காலை 8.20மணிக்கு தொடங்கி வைத்தார். முதலில் கோயில் காளை அவிழ்த்துவிடப்பட்டது. பிரமாண்ட கலரிகள் அமைக்கப் பட்டு, அதில் பார்வையாளர்கள் அமர்த்தப்பட்டனர். வீரர்கள் காப்பீடு செய்யப்பட்டும், மிகுந்த மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு, ஒவ்வொரு பிரிவாக உள்ளே களமிறக்கப்பட்டனர்.

ரசிகர்களின் கரகோசத்துடன் ஜல்லிக்கட்டுப் போட்டியின் முதல் காளை அவிழ்த்து விடப்பட்டது. முதல் காளை, வீரர்களின் பிடியில் சிக்காமல் ஓடியது. அடுத்தடுத்த காளைகள் வாடிவாசலில் இருந்து கட்டவிழ்த்து விடப்பட்டன. திருச்சியைச் சேர்ந்த மாடுபிடி வீரர்கள், அடுத்தடுத்து காளைகளைப் பிடித்து, ரசிகர்களின் கரசோகங்களைப் பெற்றதோடு, பரிசுகளையும் தட்டிச்சென்றனர். தங்கநாணயம், குத்துவிளக்கு, சைக்கிள், மிக்சி, ஃப்ரிட்ஜ் உள்ளிட்ட பொருள்களைப் போட்டியின்போது பிடிபடாத காளைகளுக்கும், காளையை அடக்கிய வீரர்களுக்கும் வழங்கப்பட்டன. கோயில் காளைகளை அடுத்து சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கரின் வெள்ளைக் கொம்பன், செவலைக்கொம்பன் காளைகள் களமிறக்கப்பட்டன. இவரின் காளைகளை வீரர்களால் அடக்கமுடியவில்லை. சுமார் 10 நிமிடங்களுக்கும் மேலாக களத்தில் நின்ற செவலைக்கொம்பன்காளை, வீரர்களுக்கு போக்குக் காட்டியது. காளை அருகே வீரர்கள் யாரும் நெருங்கவில்லை. இதேபோல, இலங்கை அமைச்சர் செந்தில் தொண்டைமானின் காளையும் வீரர்களுக்கு சிம்ம சொப்பனமாக இருந்தது.. காலை 8.25 மணிக்கு தொடங்கிய ஜல்லிக்கட்டு, மாலை 5.35 மணிக்கு நிறைவுபெற்றது. 9 மணி நேரத்தில் 1,353 காளைகள் வாடிவாசலில் இருந்து அவிழ்த்து விடப்பட்டன. மதுரை, சேலம், தஞ்சாவூர், அரியலூர், சிவகங்கை,புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த காளைகள் இதில் பங்கேற்றன.

கின்னஸ் சாதனையாக அங்கீகரிப்பதற்காக, லண்டனில் இருந்து மார்க், மெலினா ஆகியோர் வந்திருந்து ஜல்லிக்கட்டுப் போட்டியைக் கண்காணித்தனர். ஒரே நாள் ஜல்லிக்கட்டுப் போட்டியில், அதிக காளைகளை அவிழ்த்துவிட்டு, விராலிமலை ஜல்லிக்கட்டு கின்னஸ் சாதனை படைத்துள்ளதாக அவர்கள் அறிவித்ததுடன், கின்னஸ் சாதனையாக அங்கீகரித்தனர். அதற்கான சான்றிதழை அமைச்சர் விஜயபாஸ்கரிடம் வழங்கினர்.

ஜல்லிக்கட்டுக்காக 1500 காளைகள் வரையிலும் பதிவுசெய்யப்பட்டிருந்தபோதிலும், 150 காளைகள் வரை கட்டவிழ்க்க முடியவில்லை. இதனால்,மாட்டின் உரிமையாளர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. போட்டியில் அதிகபட்சமாக 21 காளைகளை அடக்கிய திருச்சியைச் சேர்ந்த முருகானந்தம், சிறந்த மாடுபிடிவீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதேபோல, சிறந்த காளையாக ராப்பூசலையைச் சேர்ந்த பி.முருகானந்தத்தின் காளை தேர்ந்தெடுக்கப்பட்டு, கார் பரிசாக வழங்கப்பட்டது. இதேபோல, சிறந்த காளைகள், மாடுபிடி வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஏராளமான பரிசுகள் வழங்கப்பட்டன. மருத்துவக் குழுக்கள், 108 ஆம்புலன்ஸ் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. ஜல்லிக்கட்டுபோட்டியைக் காண ஏராளமான பார்வையாளர்கள் வந்து குவிந்தனர்.

முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

சிற்பங்களைச் செதுக்குவதனூடாகத் தனது வாழ்வையும் செதுக்கிச் செப்பனிட்டுக் கொண்டவர் வினோதன்!

சிற்பங்கள் செதுக்குவதையும், சிற்பங்களிலும் வெளிப்படும் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் தமிழர் சிற்பக்கலை குறிக்கும். இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே தமிழரால் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மரத்தினால் சிற்பங்களை உருவாக்கியவர்கள் ஆசாரியர்கள் எனப்பட்டனர். அக்காலத்தில் அரண்மனைகளில் உபயோகப்படுத்தப்பட்ட வாயில் கதவுகள் தொட்டுத் தளபாடங்கள் வரை மரத்தினால் வடிவமைக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டவை. அவை வெறு மனே தளபாடங்களாக இல்லாமல் எமது கலைப் பண்பாட்டையும், இரசனையையும் வெளிப்படுத்திக் கொண்டதாகக் காணப் பட்டன.



புறநானூற்றில் தச்சுத்தொழிலாளி தேர் செய்வது பற்றிய குறிப்பு வருகிறது. அரண்மனை வாயில் பின் கதவுகளில் கொற்றவையின் உருவம் செதுக்கப் பட்டிருந்ததாக "மதுரைக் காஞ்சி" குறிப்பிடுகிறது. காவிரிப் பூம்பட்டிணத்தில் இருந்த வாயிற் கதவுகளில் புலியின் உருவம் பொறிக்கப்பட்டிருந்ததாகப் "பட்டினப் பாலை" கூறுகிறது. பரிபாடலில் மரப் பதுமைகள் பற்றிய குறிப்பு வருகிறது. மணிமேகலையில் மரத்தாலும் பிற பொருட்களாலும் தெய்வ உருவங்கள் செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இப்படியே இலக்கியத்தில் மரத்தாலான சிற்பங்கள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. எனவே மரத்தாலான சிற்பங்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே புழக்கத்தில் இருந்ததென்பது இதன் மூலம் உறுதியாகிறது.

பெருங்கதையிலும் "புது மரப்பாவை பொறியற்றாங்கு" என்று வருகிறது. அன்று மட்டுமல்ல இன்றும் பண்டைய கலையை வளர்க்கும் பணியில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் வீட்டு வேலைகளிலும், கோயிலுக்குரிய தேர், வாகனம் மற்றும் பிற தளபாடங்களையும் செய்து கொடுத்துக் கொண்டிருந்தாலும்,



அவற்றுள் மிகவும் நுணுக்கமாகவும், கலைப் பரிமாணத்தோடு கூடிய கலையை வடிப்பவர்கள் எனச் சிலரே காணப்படுகின் றனர். கலையைத் தெய்வமாகக் கருதி அதனை ஆராதித்தபடி கலைத்தொழிலைச் செய்பவர்களில் இந்து ஆலயங்களோடு தொடர்பு பட்ட சிற்பாச்சாரியர்கள் முதலிடம் வகிக் கின்றனர். தெய்வீகப் பின்னணியுள்ள வர்களின் கலைப்படைப்புகளில் மட்டுமே ஜீவனைக் காணலாம்.

அருகிவரும் அத்தகைய மரச்சிற்பக் கலையைத் தனது வாழ்வாதாரமாகக் கொண்டு சிற்பங்களைச் செதுக்குவதில் ஈடு பட்டிருக்கும் மட்டுவிலைச் சேர்ந்த சிவானந் தன் வினோதன் அவர்களை வலு இதழுக் காக நேர்முகம் கண்டோம். அவர் ஒரு மாற்றுத்திறனாளி. 2008 ஆம் ஆண்டுக ளில் போரின் இறுதிக்காலப் பகுதிகளிலே எறிகணை வீச்சுக்கு இலக்காகித் தனது கால்களில் ஒன்றை இழந்தவர். மல்லாவி வைத்தியசாலையில் மூன்றுமாதம் தொடர்ச் சியாகக் கிடைத்த வைத்திய சிகிச்சையி னால் காலில் ஏற்பட்ட காயத்தின் வடுக்கள் மாறினாலும் அவர் தனது இயல்புக்குத் திரும்பப் பல வருடங்களாகியிருக்கிறது. பின் னர் மீண்டும் ஊர் திரும்பியவர் சமூக சேவைத் திணைக்களத்தின் அனுசரணை யைப் பெற்று யாழ்ப்பாணக் கச்சேரியடி யிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவனத்தின் உதவியு டன் செயற்கைக்காலைப் பொருத்தித் தற் போது அதன் உதவியுடன் தனது வாழ்க் கையை முன்கொண்டு செல்கிறார். இது வரை மூன்று தடவை கால்கள் மாற றப்பட்டிருப்பதாகச் சொன்னார். அவ்வாறான அனைத்துச் சந்தர்பங்களிலும் அவருக்கு அரச சமூக சேவைத் திணைக்களத்தின் அனுசரணையைப் பிரதேசச் செயலகத் தினர் பெற்றுக் கொடுத்திருக்கின்றனர்.

இவர் மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் 1986களில் யாழ். குடா நாட்டை இந்தியப் படை ஆக்கிரமித்துக் கொண்டபோது இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்று யுத்தகாலப் பகுதியை வன்னிலேயே கழித்தவர். வவுனிக் குளத்தில் வாழ நேர்ந் ததால் ஆரம்பக் கல்வி தொட்டு இறுதிவரை அங்கேயே கற்றவர். வன்னியிலிருந்த பொழுது அவர்களின் வாழ்வாதாரத்துக்குரிய தொழிலாக விவசாயமே காணப்பட்டது.

பின்பு யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின் னர் தனது சொந்தக் கிராமமான மட்டு விலுக்குத் திரும்பி வந்தாலும் ஒரு வரைய றைகளுக்குட்பட்ட, ஆகக் குறைந்த அடிப் படை வசதிகளோடு தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்ததாகச் சொல் லுகிறார் வினோதன். அரச அனு சரணையோடு வீட்டை அமைத்துக் கொள்வ தற்கு நிதி ஒன்றினைப் பெற்றுக் கொண்டா லும் வசதியான வீடொன்றினை அமைத்துக் கொள்வதற்காகப் பல சிரமங்களைத் தாங்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்திருக்



கின்றனர். "திரும்பவும் மட்டுவிலுக்கு வந்த போது எதுவித தொழிலும் இருக்கவில்லை. வந்து குடியேறியதும் சிறிய அளவிலான விவசாயத்தை மேற்கொண்டேன். பின்னர் அதன் மூலம் பெற்றுக் கொண்ட வருமானம் போதாமையினால் எனக்கு ஏற்ற தொழில் ஒன்றினைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டேன். எந்தத் தொழிலைச் செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தபோது, எனது உறவினரூடாகக் கோயில்களுக்குரிய தேர் மற்றும் மர வாகனங்கள், மரச் சிற்பங்கள் என்பனவற்றை வடிவமைக்கும் பணியைச் செய்து கொண்டிருக்கின்ற ஆசாரியர் கலாமோகனின் தொடர்பு கிடைத்தது. ஆரம்பத்தில் தொழில் தெரியா விட்டாலும் பரவாயில்லை வந்து தொழிலைப் பழகும்படி சொன்னார். எனக்கும் அந்த வேலையில் ஆர்வம் இருந்ததனால் உளியைப் பிடித்துச் சிற்பங்களைச் செதுக்குவது எப்படி என்பதைச் சிறுகச் சிறுகக் கற்றுக் கொண்டேன். நாளடைவில் எனது கைகள் உளியைக் கையாள்வதிலுள்ள தொழில் நுட்பத்தை பழகிக் கொண்டதனால் இன்று எனது குருவுடன் சேர்ந்து பல தேர்களை வடிவமைப்பதற்கு உதவியாக இருந்திருக்கிறேன்" என்று அடக்கமாகச் சொல்லுகிறார் வினோதன்.

மீள் குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டத்தினூடாகக் கிடைத்த அந்தச் சிறிய வீட்டின் முற்பகுதியில் ஒரு தாழ்வாரத்தை



அமைத்து அதில் மரக்கட்டைகளைச் செதுக்கக் கூடிய சிறிய மின் பொறிகள் இரண்டினை வைத்தே தனது பணிகளை அவர் மேற்கொண்டு வருகிறார். பகலில் தனது குருவின் பட்டறையிலும், இரவுகளில் தனது வீட்டிலும் வைத்தே இவர் பணிகள் நடைபெறுகின்றன.

"அப்பா இல்லாததாலை அம்மாதான் குடும்பத்தை வழிநடத்துகிறா. அம்மாவுக்கு உதவியாகக் குடும்பச் செலவுகளை நானே பார்க்கிறேன். எனது சகோதரர்கள் பாடசாலைக்குச் செல்பவர்கள். அவர்களுக்குரிய படிப்புச் செலவுகளையும் நானே பார்த்துக் கொள்ளுகிறேன். எனது வழமையான வேலைகளோடு மாடு, முயல் என்பனவற்றையும் வளர்க்கிறேன். இப்போது வரும் வருவாய் அன்றாடச் செலவுகளுக்கே போதுமானதாக இருக்கிறது. யாராவது சிறிது பண உதவி செய்தால், எனது அம்மாவின் உதவியோடு ஆடுகளை வாங்கி வளர்க்கலாம் என்றிருக்கிறேன். - என்கிறார் வினோதன்.

வினோதனை முதல்முறையாகச் சந்தித்த போது அவர் எவ்வகையில் மாற்றுத் திறனாளியாக இருக்கிறார் என்றவிடயத்தைத் தேடினேன். ஏனெனில் செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டாலும் மிகவும் இயல்பாக நடக்கிறார். நடையில் மட்டுமல்ல அவர் கொண்ட எல்லா நடைமுறைகளிலும் இயல்பாகவே காணப்படுகிறார். மாற்றுத் திறனாளி உலகை மாற்றும் திறனாளி என்பதற்கு அவர் ஒரு முன் உதாரணமாக மட்டுமல்ல, வலுவிழந்தவர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு சோம்பேறிகளாகச் சமூகத்தில் வலம் வருகின்றவர்களுக்கு "தாமும் முயற்சித்தால் நல் வாழ்க்கை வாழலாம். முன்னேறலாம்" என்றதற்கு வினோதன் ஒரு முன்னுதாரணமாக....

வலுவிடம் கேளுங்கள்

கருவியின் முகநூலில் தாங்கள் இடும் பதிவுகளை பார்த்திருக்கிறேன். அதில் மாதமொரு பொதி எனும் நிகழ்வில் அடிக்கடி உலர் உணவுப் பொதிகள் கொடுத்து வருகிறீர்கள். இது எந்த அடிப்படையில் யாருக்கு வழங்கப்படுகிறது?

சி.லக்சி, உரும்பிராய்.

மாதம் ஒரு பொதி கருவி நிறுவனத்தின் செயல்நிலையிலுள்ள திட்டங்களில் ஒன்று. மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள அங்கத்தவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டு வருகின்றது 25 பயனாளிகளுக்கு நிரந்தரமாகவும் 50 பயனாளிகளுக்கு சுழற்சி முறையின் அடிப்படையிலும் மாதாந்தம் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது. கருவி நிறுவனத்தினூடாக சமூக மாந்தர்களே குறித்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தாங்கள் விரும்பும் பட்சத்தில் எமது நிறுவனத்தோடு நேரடியாக தொடர்புகொண்டு தங்கள் இயலுமைக்குட்பட்ட வகையில் பங்களிப்புக்களை நல்கி இணைந்துகொள்ள முடியும்.

அன்பரே உங்கள் கேள்வியை மட்டுமல்ல உங்களையும் கருவி நிறுவனத்தினராகிய நாம் வரவேற்கின்றோம்.

அன்பான வாசகர்களே!

மாற்றுத்திறனாளிகள் தொடர்பானதும் மற்றும் தன்னம்பிக்கை தரக்கூடியதுமான கவிதைகள் சிறுகதைகள் என்பவற்றை வலுவிற்கு எழுதி அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்கள் வலுவில் பிரசுரமாகும்.

அன்பான வாசகர்களே!

வலு இதழினை சந்தாமுறையில் பெற்றுக்கொள்ள விரும்பின் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். நாம் உங்களுக்கு சந்தா விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்போம். அதனைப் பூர்த்திசெய்து அனுப்புவதனூடாக வலு இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இணுவில்
'சந்திரசேகரன் சிவாந்தினி"

சிறுகதை

முள்ளம்....!



செல்லம்மா......? செல்லம்மா என்ற சிங்காரம் வேலைக்களைப்பில் முனங்கிக் கூப்பிட்டவாறே தலைவாசல் தூணைப் பிடித்து உட்கார்ந்தார்

வந்திட்டியளோ அப்பா.... பதிலுக்கு ஒரு குரல் பெருமூச்சாக வெளிட்டாள். பிரகாசித்து அணைந்த மெழுகுவர்த்திபோல் ஒளிர்ந்து மறைந்தது.

செல்லம்மா.....? குடிக்க நீர் கொண்டு வாரும்...... குடித்திட்டு முகம் கழுவிச்சாப் பிடுவம்...... மத்தியானமும் சாப்பிடேல்ல.... பசியும் வராதது நல்லதாய் போச்சு.... பெரிசா உழைப்புமில்லை.

என்ற சிங்காரத்திற்கு இடிவிழுந்தது போல் குசினியிலிருந்து பெரும் சத்தம் வந்தது.

அப்ப உழைப்பில்லை என்றால் ஏன்.....? கடைக்குப்போறியள் இங்க கதிரைகள் கனக்கக்கிடக்கு பின்னிக் கொடுத்தாலும் நல்ல காசு வரும்

செல்லம்மா.....நீ..... எனக்கு செல லம்மா வேண்டாம் சாப்பாட்டைக் கொண்டு வா.....

இம் ஏதோ இறுமாப்பாக்கேக்கிறியள் வேண்டித்தந்திட்டுப் போனமாதிரி.... நான் நினைச்சேன் நீங்கள் கடையிலே ஏதேனும் சாப்பிட்டிருப்பியள் என்றுதான்..... நானும் ஒன்றும் செய்யேல்ல அடுப்பு மூட்ட நெருப் பெட்டியில்ல எத்தனை நாள்தான் கடனுக் குப்போறது. அவள் பாக்கியமும் என்னைக் கண்டால் விலகிப்போறமாரிக்கிடக்கு.

அவளும் எத்தனை நாளைக்குத்தான் உதவுவாள் அவளின்ர பக்கத்தில ஞாயம் இருக்குத்தானே.. குறுக்கிட்ட சிங்காரம் சரி.... சரி..... கதையை விடு.

தேன்மொழி..... தேன்மொழி..... எங்க மகள் போட்டாள் சத்தத்தைக்காணோம்....

ஏன் இப்ப அவளை.... என்னட்டைச் சொல்லுங்கோ அவள் படிச்சுக்கொண்டு இருக்கிறாள் குழப்ப வேண்டாம் என்ற செல்லம்மாவைப் பார்த்து இந்தா அப்ப நீ இருக்கிற காசில நெருப்பெட்டியும் சீனியும் தேயிலையும் வேண்டிவா....

செல்லம்மாவிடம் கொடுத்துவிட்டு எழுந்து நடந்த சிங்காரம் குசினிப்புகட்டில் பனையோலையையும் பன்னாடையையும் எடுத்துக்கொண்டார்.

பன்னாடையைக் கையிலெடுத்ததும்சில நினைவுகள் மனதில்நெருடிச் சென்றது.

தேவையானதை விட்டு விட்டு தேவை யில்லாததை பிடித்து வைத்திருக்கும் தன் மையுடையது பன்னாடை அதை எரித்து அழிக்க நினைத்தாலும் அது எரியும்போது எமக்கு வெளிச்சத்தைத் தருகிறது அதே நேரம் அது வடிகட்டாவிட்டால் கூடாத விடயமும் சேர்ந்தெல்லோ இருக்கும். எல்லாம் அவன் செயல்.

இந்த உலகத்தில் கூடாது நல்லது என்று எதுவுமே இல்லை எல்லாம் தேவையானது தான் என நினைத்துக் கொண்டு அருகில் உள்ள கதவுகளை பிடித்துக்கொண்டு நகர்ந்த சிங்காரம் அடுப்பில் பழைய சாம்பல் ஏதும் இருக்கோ என கையை வைத்து பரீட்சித்தார்.

திடீரென பூனை ஒன்று சீறிப்பாய்ந்தது. மியாவ்.. மியாவ் என்ற சத்ததுடன்.

சீ.... சீ.. இடமில்லாம இதுக்குள்ள ஒரு படுக்கை.... எத்தனை பழந்துணியள் கிடக்கு அதுகளுக்குள் படுப்பமெண்டில்ல எனச் சினந்து கொண்டார்.

சிங்காரத்தின் சிறு தொகைப் பணத் துடன் கடையில் வரிசையாக நின்றிருந்த செல்லம்மாவை நோக்கி இஞ்ச பாரண ஒரு புதினம் தெரியுமே என மல்லிகாவின் வாயிலிருந்து மலராத மொட்டுக்களாய் சிந்த தொடங்கியது செய்திகள்.

நடந்து முடிந்த புலமைப்பரீட்சைப் பெறு பேற்றில் 145 புள்ளிகளைப் பெற்றிருக்காம் தினுசா என்ற பிள்ளை செல்லம்மா பதி லுக்கு 160 புள்ளி எடுத்தே பாஸ் பண்ண லையாம்.... அதுக்கென்ன இப்ப பெரிசாச் சொல்லுறியள்.

இல்லைச் செல்லம்மா அந்தப் பிள்ளைக்கு பிறப்பிலிருந்து கை கால்கள் ஏலாதாம் தாயும் மனநோயாளியாகி விட்டா ராம். பராமரிப்பு இல்லத்திலதான் பிள்ளை வளர்ந்து வருது என்றும் இருத்திப்போட்டு தள்ளூற வண்டில்ல இருந்து பரீட்சைக்கு வந்ததாம்.

எப்பிடித்தெரியுமோ படுத்துக்கிடந்து வாயால எழுதினதாம். அதுக்காக கொஞ்சநேரம் கூடக் குடுத்திருக்கினம் இன்னுமொரு புதினம் இதுவரை காலத்தில் இவள் படிக்கிற பாடசாலையில எந்தப்பிள் ளையும் இப்பிடிக் கூடின புள்ளியோ அல்லது போட்டிகளிலேயோ பங்குபற்றி மாகாணம் தேசியம் என சென்று வந்ததில்லையாம்...

நல்லாச் சித்திரம் வரைவாளாம் பேப்ப ரில போட்டுக்கிடக்கு.... அதிபர் பாராட்டியி ருக்கிறார் எனச் சொல்லிக்கொண்டே சென்ற மல்லிகா..... கண்ணைக் கசக்கிக் கொண் டாள்.

என்ன மகளன்ர ஞாபகம் வந்திட் டுதோ..? என்ன செய்யிறது கடவுள் ஒருத்த ருக்கு ஒன்றைக்கொடுத்து இன்னொன்றை எடுக்கிறார். சிலருக்கு அதுவுமில்லை என மல்லிகாவை ஆற்றுப்படுத்தினாள் செல் லம்மா.நான் கவலைப்படேல்ல நினைக்கப் பழைய ஞாபகம் வரத்தான் செய்யுது. ஏன்ர பிள்ளை மலேரியா வந்து சாகவில்லையென்றால் இப்படியேதும் சாதித்திருப்பாள்தானே என மல்லிகா புலம்ப சரி சரி விடு இனி நடக்கிறதைப் பாப்பம் என தன்னுடைய கூடப்பிறந்த தங்கைச்சியென்ற உரிமையோடு கையைப்பிடித்து சமாதானம் செய்துவிட்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டாள் செல்லம்மா.

ஓட்டமும் நடையுமாக வீடு வந்த செல் லம்மாவிற்கு இடையிடையே ஒரு யோசனை தோன்றி மறைந்தது.என்ர மனு சன் பொய் சொல்லமாட்டார். என்ன? உழைப்பில்ல என்று சொல்லுறார்.நல்லா வேலை செய்யக்கூடிய மனுசன். ஏதும்

குடிப்பழக்கம் இருக்கோ தெரியாது. கேட்டால் சிரித்தக் கொண்டு குடிக்கிறன்தான் அதுக்கென்ன என்றுதான் சொல்லுறார்.

இப்ப ஓவறாவிட்டுதோ எனப்பல சிந்த னைகளோடு வீட்டை வந்த கையோடு அடுப்படி நோக்கி விரைந்தாள்.செல்லம்மா நான் வங்கிக்குப் போகவேணும் நீயும் ஒருக்கா என்னோடவாவன் வெளிக்கிடு என்றார்.சிங்காரம் என்ன திடீரென்று வெளிக்கிடென்றால்.... இல்லை நீவா ஏன்....என்ற செல்லம்மாவைப் பார்த்து சிரித்தவாறே எனக்கு கண் தெரியாது... நான் சரியாக நெறுத்துக்கொடுத்தாலும் என்னில பிழை பிடிக்கினம் பிழையாகச் செய்திருப்பானாம்? அப்படிச் செய்ததை உறுதிப்படுத்திவினமோ? என்றால் இல்லை கிழிந்த காசைத்தந்தும் சிலர் ஏமாற்றப்பாக் கினம் அதுவும் பெரிய பிரச்சினை

அதுதான் வீட்டோட ஒரு கடை போட் டால் நீயும் உதவியாக இருப்பாய் அதோட கதிரையும் பின்னிக்கொடுக்கலாம் மற்றவேளை போக்குவரத்துப்பிரச்சனை தீரும்.

அது சரி கடை கட்டுறது என்றால் நிறையக் காசு வேணும் கடன் எடுக்கப் போறியளோ? இல்லை இல்லை இப்ப தான் ஒரு இரகசியம் சொல்லப்போறன் எனத் தொடர்ந்த சிங்காரம் தனது அனுபவத்தை பகிரத்தொடங்கினார்.

நான் இரண்டு இலட்சம் சேர்த்துப் போட்டன் தெரியுமோ..... என்ர வாயையும் வயித்தையும் கட்டி என்றதும் வாயைப் பிளந்து நின்ற செல்லம்மா......

என்னண்டப்பா உங்களால இப்படி முடிந்தது நானும் ஏதோ நினைச்சிட் டன்..... உழைக்கிற காசு குடிச்சியளோ

என்று....அப்ப சொல்லுங்கோ எப்பிடிச் சேர்த்திங்கள். பொன்னர் பக்கத்தில கடை வைச்சிருக்கிறார். அவர் நெடுகலும் குடிக்க வா.... வா.... என்று ஆக்கினை நானோ மறுத்து விட்டன் அதோட பீடி சிகரட் எல்லாம் நேரத்திற்கு நேரம் குடிப்பார் நான் ஒரு நாளைக்குக் குடிக்கும் அளவைக் கணக்கு போட்டுப்பாத்தன். அந்தளவு காசையும் கொண்டு போய் நான் குடிப்பதாக நினைத்து வங்கியில போட்டன் அதுதான் நான் செய்த சாதனை.இதைத்தான் சொல்லுறது மாத்தியோசி என்று மாற்றம் என்ற கல்வி எம்மிடம் வந்தால் படிக்க வேண்டிய தேவை இல்லை.

ஓம்..ஓம்..நீங்கள் படிக்காத நிலையிலும் இப்பிடி சிந்தித்தீங்கள் எங்கட பிள்ளைகள் நல்லாப்படிக்குது.இனி எதிர்காலத்தில் எப்பிடி இருக்கும் என்று சொல்ல முடியாது என பெருமூச்சு விட்டுக்கொண்ட செல்லம்மா கடவுளை வீட்டில சாமியறையில பார்த்தி ருக்கிறன் மரத்தடியில பார்த்திருக்கிறன் கோயில்ல சிலையாப் பார்திருக்கிறன் இப்ப தான் நான் நேராப் பாக்கிறன் என்று கையை இறுக்கிப்பிடித்துக் கொண்டு தன் மனதைத்திறந்தாள்.

வலு தரும் ஜோதிடம்

யோதிடர் வீ.ஏ.சிவராசா

வாஸ்து சாஸ்திரம்

இயற்கையோடு இன்புற்று வாழும் மனையடி சோதிடக்கலையே வாஸ்து

- ❖ நமக்கு கிடைத்த இல்லத்தை வாஸ்து எனும் அரிய கலையைப் பயன்படுத்தி வாழ்வில் எல்லா நலமும் பெற்று இன்புற்று வாழ முன் வாருங்கள்.
- ❖ வீட்டின் மேற்குத்திசையைவிட கிழக்கு திசையில் காலி இடம் அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ❖ இறந்தவர்களின் படங்களை சாமி அறையில் கடவுள் படங்களோடு சேர்த்து வைக்கக் கூடாது.
- ❖ மிருகங்களின் பதப்படுத்தப்பட்ட தலைகளை வீட்டினுள் அழகுக்காக வைக்கக்கூடாது.
- ❖ வீட்டுக்கு தென்மேற்குப் பகுதியில் குழியோ கிணறோ இருக்கக் கூடாது.
- ❖ வீட்டின் தென்மேற்கு அறையின் தளம் தாழ்ந்திருக்கலாகாது.
- ❖ தென்மேற்குத்திசையில் தலைவாயில் அல்லது நுழைவாயில்(கேற்) இருத்தலாகாது.
- ❖ தென்கிழக்குப் பகுதி நிலத்தடியில் தொட்டியோ கிணறோ அமைத்தலாகாது.
- ❖ சாமி அறையின் நீளத்தை விட அடுத்த அறைகளின் நீளம் குறைவாக இருக்க வேண்டும்
- ❖ சாமி அறையின் வாசலில் நின்று பார்த்தால் சமையலறை அடுப்பு தெரிதல் நன்று.
- ❖ சாமிஅறையின் அகலத்தை விட ஹோலின் அளவு குறைவாக இருத்தல் வேண்டும்
- ❖ குடும்பத்தலைவர் தென்மேற்கு அறையை படுக்கை அறையாக பாவித்தல் வேண்டும்.
- ❖ வடக்குவாயு பகுதியில் வெளியே போகும் கதவு வைக்கக் கூடாது.

மாற்றுத் திறனாளிகளை அரவணைப்போம்!

" அரிது அரிது மானிடராய் பிறத்தலரிது
அதனிலும் அரிது கூன் குருடு செவிடு நீங்கிப்
பிறத்தலரிது."

என்றார் ஔவையார் உண்மையில் சுகதேகியாக வாழ்தல் சிறப்புடையது. அச்சிறப்பை அர்தமுள்ள வாழ்வாக அமைப்பதற்கு எமது மாற்றுத்திறனாளி சகோதரப் பிறப்புக்களை வாழவைப்பது அவசியமாகும். மாற்றுத்திறனாளிகள் இவ்வுலகில் ஒதுக்கப்படவேண்டியவர்களா? அவ்வாறு விடுதல் சரியா? நினைத்தாலே மிகப் பாவமான செயலாகவும், சிந்தனையாகவும் தெரிகின்றது. உண்மையில் அவர்கள் அங்கமிழந்தவர்களே தவிர ஒதுக்கப்பட்டு வாழப் பிறந்தவர்கள் அல்லர். அவர்களும் வாழப்பிறந்தவர்கள். அவர்களிடம் ஆற்றல் மிகவுண்டு. சாதரண மக்களிடமில்லாத ஆற்றலை அவர்களிடம் காணக்கூடியதாகவுள்ளது. கண்பார்வை இழந்த ஒருவர் உயர்கல்வி அமைச்சராகக் கடைமையாற்றுவதைக் காண்கின்றோம். இன்னும் சிறந்த பாடகர்களாகவும், கைத்தொழிலாளர்களாகவும் விற்பனையாளர்களாகவும். பல தொழிலாளர்களாகவும் ஊனமுற்றோர் விளங்குவதைக் காண்கின்றோம்.

● திருமதி. பாஸ்கரன் சித்திரா

இவர்களைப் போல ஏனைய மாற்றுத்திறனாளிகளும் சமூகத்தில் ஒட்டி உறவாடும் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள நாம் உதவவேண்டும்.

இன்று கண்பார்வை அற்றவர்களுக்காகப் பிரெய்லி எழுத்து முறை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதன் மூலம் கண்பார்வை அற்றவர்கள் நன்கு படித்து நம்மிலும் அறிவாளிகளாக வந்துள்ளனர். ஹெலன் கெல்லர் என்றொரு பெண்மணி சிறுவயதிலேயே பார்வை கேட்டல் பேச்சுப் புலன்களை முற்றாக இழந்தும் நம்பிக்கை இழக்காமையால் பிரெய்லி எழுத்து மூலம் படித்து மாற்றுத்திறனாளி இனத்திற்கே ஒரு விடிவெள்ளியானார். இந்தியாவில் சுதா சந்திரன் என்றொரு நாட்டிய தாரகை ஒரு விபத்தின் போது தன் காலை இழந்தும் மனம் சோராது செயக்கைக் கால் பொருத்திய பின்பும் விடாமுயற்சியுடன் பயிற்சி செய்து செயக்கைக் காலுடனேயே பல நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்திக்கொண்டிருக்கிறார்.

இவையெல்லாம் மனதில் புத்துணர்ச்சியும், நம்பிக்கையும் கொண்டால் எதையும் சாதிக்கலாம். என்ற உணர்வையே நமக்கு ஏற்படுத்துக்கின்றன. எனவே இத்தகைய ஒரு தன்னம்பிக்கையை ஊட்டி அவர்களிட முள்ள தாழ்வு மன்பான்மையையும், அவநம்பிக்கையையும் களைய வேண் டியது நமது கடைமையாகும். அதற்காக முதலில் உரிமையை நாம் மதிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

மாற்றுத்திறனாளியின் வாழ்வு மலர்வதிலே சமூகத்தினராகிய எமது பங்கே அளப்பரியதாகும். ஒரு சமுதாயத்தில் ஒருவன் கவனிக்கப்படும் விதத்திலேயே அவனது உயர்ச்சியும், வீழ்ச்சியும் தங்கி யுள்ளது. தாம் அவமதிக்கப்படுகின்றோம். சுமையாகக் கருதப்படுகின்றோம். என்று நினைத்தாலே ஊனமுற்றோர் தம்மை உபயோகமற்றவர்களாகக் கருதத் தொடங்கி விடுவார்கள்.

நாம் மாற்றுத்திறனாளிக்குச் செய் யும் கடமை என்பதை விட மாற்றுத்திற னாளி சமூகத்திடம் எதை எதிர்பார்க்கின் றார்கள் எனப்பார்ப்பது அவசியமாகும். அவர் கள் எம்மிடம் எதிர்பார்ப்பது தம்மை, எம்முடன் அரவணைத்துச் செல்லும் சமூக அங்கீகாரத்தையே ஆகும். எங்களுடன் சேர்த்துச் சமூக வாழ்வில் பங்கு பற்றும் போது அவர்களுக்கு ஏற்படும் சந்தோஷ மும், வாழ்வுப்பற்றுதலும் அளப்பரியது. இதுவே அவர்களது வாழ்வின் படிக்கல் லாகி விடுகிறது. நாம் சமுதாயத்துடன் இணைந்து வாழமுடியாது. நாம் பிறர் தரும் உதவியில் தான் தங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணம் காரணமாக ஏற்படும் தாழ்வு மனப்பான்மை தன்னம்பிக்கை யின்மை என்பன நீங்க வேண்டுமாயின் எமது அன்றாட வாழ்க்கையில் மாற்றுத் திறனாளிகளையும் அரவணைத்துக் கொள்ள வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களை ஒதுக்கி வைக்கவும் கூடாது ஒதுங்கவிடவும் கூடாது.

"நம்பினவனுக்கு நடராஜன்" என் பார்கள் உண்மையில் எமது வாழ்க்கை யின் முற்னேற்றமும், திருப்தியும் எமது மனத்திலேயே தங்கியுள்ளது. கவிஞர் கண் ணதாசன் காதலி கையிழந்த காதலனுக்கு கூறுவதாக எழுதிய ஒரு பாடலில் கூறுகிறார்.

"சிங்கத்தின் கால்கள் பழுதடைந் தாலும் அதன் சீற்றம் குறைவதுண்டா உங் கள் அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் என் அன்பு குறைவதுண்டா" இங்கு காதலி தன் காதலனுக்கு ஆறுதல் கூறி வாழ்க்கை யில் இணைத்துக்கொள்கின்றார். என்னா லும் வாழமுடியும் என்ற தன்னம்பிக்கையும், மகிழ்வும் அவருக்கு ஏற்படுகின்றது. எனவே மாற்றுத்திறனாளிக்கு நாம் செய்யும் முதலா வது கடைமை அவர்களைத் தன்னம்பிக்கை கொண்டவர்களாக ஆக்குவது சமுதாயத்தில் அவர்களுக்கு அந்தஸ்து உண்டு என்பதை உணர்த்துவதும், வாழ்க்கை வாழ்வதற் கேயல்லாமல் வாடுவதற்கல்ல என்ற உண் மையை ஏற்படுத்துதலும் அவசியமாகும்.

இரண்டாவதாக அவர்களின் வாழ்க் கைக்கு உதவும் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் வழங்க வேண் டும் என்பது மறுக்கமுடியாத உண்மை ஆயினும் அவர்கள் தமது சொந்தக்காலில் நின்று வாழும் நிலையை ஏற்படுத்தும் போது தான் அவர்களுக்கு வாழ்க்கையில் பிடிப்பும், திருப்தியும் உண்டாகும். அவர்களிடமுள்ள ஆற்றலைக் கண்டுபிடித்து அதற்கான தொழில்வாய்ப்புக்களையும், வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். இக்கடமையை தனி மனிதனாகச் செய்வதைவிட ஸ்தாபன ரீதியாக முன்னின்று சிந்தித்து செயலாற்றும் போது சிறந்த திட்டங்களைச் செயற்படுத்த முடியும்.

இன்று ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், உளவளநலச் சங்கம், அரிமாக் கழகம், கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம் என்பன இத்தகைய செயற்பாடுகளுக்கு அத்திவார மிட்டுள்ளன. ஜெயப்பூர்க் நிறுவனம் கால் இழந்த பலர் வாழ்க்கைப் பாதையில் பயணிக்க செயற்கை கால்களை வழங்கி உதவியுள்ளது. மேற்கண்ட ஸ்தாபனங்கள் எதிர்காலத்தில் ஊனமுற்றோரின் சுயவாழ்விற்கான திட்டச் செயற்பாடுகளை விரைவில் விஸ்தரிப்பார்கள் என்பது கண்கூடு.

மாற்றுத்திறனாளிகளின் மனதில் தன்னம்பிக்கை விதையை தூவி எங்களாலும் ஏனையவர்கள் போல இவ்வுலகில் போட்டி போட்டு வாழமுடியும். என்பதை எடுத்துக்காட்டுவதாய் கருவி நிறுவனம் தனது உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்வதும், அதனை விற்பனைசெய்வதும் அவர்களின் உழைப்புக்கு எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறாக நாம் ஊனமுற்றோரை வாழ்வில் தன்னம்பிக்கையுள்ள மனிதர்களாக்குவதும் அவர்களின் வாழ்க்கையைத் தாமே கொண்டு செல்லும் நிலமைக்கு உருவாக்குவதும் எதிர்காலத்தில் ஊனமாகும் மக்களின் தொகையைக் கட்டுப்படுத்துவதும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். நாம் இதனையுணர்ந்து இந்தப் புனிதமான துறையில் சேவையாற்றும் ஸ்தாபனங்களுக்குப் போதிய ஒத்துழைப்பும், உதவியும் வழங்கி அவர்களது பணி விஸ்தரிக்கப்படுவதற்கு ஊக்கமும், ஆக்கமும் வழங்குவது அவசியமாகும். ஊனமுற்றோருக்கு உதவிகள் செய்வதில் மன ஆறுதலுற்று இன்பப் பூஞ்சோலையாய் இவ்வுலகை மாற்றுறோமாக.

"ஊனமுற்றுப் போனாலும் அவர்
உள்ளம் நிமிர்ந்து நிற்கட்டும்."

எழுதுங்கள் வெல்லுங்கள்

போட்டி இல. 21 வினாக்கள்

1. இலங்கை இந்திய ஒப்பந்த பிரகாரம் இணைக்கப்பட்ட வடக்கு.கிழக்கு மாகாணம் எப்போது இரண்டாக பிரிக்கப்பட்டது?
2. வத்திக்கான் நாட்டின் நாணயமாக யூரோ நடைமுறைப்படுத்தபட்ட ஆண்டு எது?
3. பெரிய வரிக்குதிரை இனத்தின் பெயர் என்ன?
4. சர்வதேச வானொலி தினம் எப்பேது கொண்டாடப்படுகிறது?
5. உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் அமைந்துள்ள இடம் எது?
6. போலியோ வைரஸ் எத்தனை வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அதிகம் தாக்குகிறது?
7. சத்திரேந்திராசிங் என்ற மாற்றுத்திறனாளி எப்போது ஆங்கில கால்வாயை நீந்திக் கடந்தார்?
8. 2018ம் ஆண்டுக்கான சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின தொனிப்பொருள் யாது?
9. உலக செவிப்புலனற்றோர் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?
10. ஒட்டிச பாதிப்புற்ற ஒருவர் உலகை வியக்க வைக்கும் வகையில் நாடுகளையும் நகரங்களையும் வரைந்து சாதனை படைக்கின்றார். அவர் பெயர் என்ன?

இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழுள்ள புள்ளிக்கோட்டில் எழுதி 15.06.2019 ற்கு முன்னர் எமக்குக் கிடைக் கக் கூடியதாக அனுப்புங்கள்.

இப்படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப் படும். சரியான விடைகளை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு (1) 1000/=, (2) 500/=, (3) 250/=, பணப்பரிசாக வழங்கப்படும்.

போட்டி இல.21 விடைகள்- 21

01. ....

02. ....

03. ....

04. ....

05. ....

06. ....

07. ....

08. ....

09. ....

10. ....

1. முழுப் பெயர் : ------------------------------------
2. தபால் முகவரி : ------------------------------------
----
3. தொலைபேசி இல : ------------------------------------
4. பிறந்த ஆண்டு மாதம் திகதி : ------------------------------------

போட்டி இல:20 விடைகள்

1. மரஅணில்
2. யூரோ
3. அனடோலியாவிலுள்ள சக்ரோஸ் மலைத்தொடர்
4. 1909
5. 2024
6. றிச்சார்ட் பேரன்ஸ்டைன்
7. கலைஞர் மு கருணாநிதி
8. ஒக்டோபர் 10
9. ஆங்கிலக்கால்வாய்
10. கபிரியேல்ஹெரடியா

அனுப்ப வேண்டிய முகவரி :

எழுதுங்கள் வெல்லுங்கள்

கருவி

மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

இல : 1166/15. அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

AnnA
1959
சாயிசுகந்தா
பத்திகள்
madhuranga
INCENSE STICKS Rs. 30/=
சுகந்த மல்லி
நறுமண பத்திகள்
துர்க்கா
இது ஒரு அண்ணா தயாரிப்பு
ஐந்து சகாப்தத்திற்கு மேலாக மக்களின் அபிமானத்தைப் பெற்றது....
அண்ணா தொழிலகம்
இனுவில் தெற்கு, இனுவில்.

எவகிறீன் அச்சகம், இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893